# வானவில்

VAANAVIL
ISSUE – 56 AUGUST 2015

இதழ் - 56 ஆவணி 2015


# தாய்நாட்டின் மீது இருள் சூழ்ந்தது!



இலங்கையின் 15வது நாடாளுமன்றத்துக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான பொதுத் தேர்தல் ஒகஸ்ட் 17ஆம் திகதி நடைபெற்று முடிந்துள்ளது.

இந்தத் தேர்தலின் மூலம் அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்குத் தேவையான 113 உறுப்பினர்கள் தொகை (மொத்த தொகை – 225) எந்தவொரு பிரதான கட்சிக்கும் கிடைக்கவில்லை. இருப்பினும் ஆகக் கூடுதலான தொகையான 106 உறுப்பினர்களை ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க) தலைமையிலான பல கட்சி முன்னணி பெற்றுள்ளது. அதற்கடுத்ததாக, 95 ஆசனங்களை ஐக்கிய சுதந்திர மக்கள் கூட்டமைப்பு (ஐ.ம.சு.கூ) பெற்றுள்ளது.

இறுதி நிலவரங்களின்படி, ஐ.தே.க ஆட்சியமைப்பதற்கு ஐ.ம.சு.கூ வின் சிறுபான்மையினர் முன்வந்துள்ளனர். இவற்றோடு 6 உறுப்பினர்கள் கொண்ட இனவாத, அரசியல் சந்தர்ப்பவாதக் கட்சியான ஜே.வி.பி, ஐ.தே.கவுடன் சேர்ந்து போட்டியிட்டாலும், தனியாகவும் போட்டியிட்டு 1 உறுப்பினரைப் பெற்றுக்கொண்ட சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், 16 உறுப்பினர்கள் கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு போன்ற கட்சிகளின் ஆதரவும் ஐ.தே.க விற்கு இருக்கும். ஐ.தே.க. அரசுக்கான தமது ஆதரவை தமிழ் தேசியக் கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தன் தேர்தலுக்கு முன்னரே பகிரங்கமாக கூறியுள்ளார்.

இலங்கையில் 1978இல், தற்போதைய பிரதமரும், ஐ.தே.க. தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவின் மாமனார் ஜே,ஆர்.ஜெயவர்த்தன அறிமுகப்படுத்திய நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசியல் அமைப்பில் உள்ளடங்கியுள்ள விகிதார தேர்தல் முறைமையின்படிதான் இந்தத் தேர்தலில் ஐ.ம.சு.கூ. விட, ஐ.தே.க 11 உறுப்பினர்களை அதிகமாகப் பெற முடிந்தது. இந்தத் தேர்தலில் இரண்டு பிரதான கட்சிகளும் பெற்றுக்கொண்ட வாக்குகளின் வித்தியாசம் ஏறத்தாழ மூன்று இலட்சமாகும். ஆனால் ஜனவரி 8ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது வெற்றி பெற்ற மைத்திரிபால சிறிசேனவுக்கும், தோல்வியடைந்த மகிந்த ராஜபக்சவுக்கும் இடையிலான வாக்கு வித்தியாசம் சுமார் நான்கரை இலட்சம் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே ஐ.ம.சு.கூக்கு உள்ள மக்கள் செல்வாக்கு குறைவடையவில்லை என்பது இதன் மூலம் தெளிவாகின்றது. குறிப்பாக, சிங்கள மக்களின் ஆதரவு ஐ.ம.சு.கூ இற்குத்தான் என்பது தெளிவாகியுள்ளது.

இந்தத் தேர்தலில் ஐ.தே.க. வெற்றி பெற்றதற்கு பல காரணிகள் உள்ளன. அதில் பிரதானமானது, தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், அவரது சகபாடியான முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் சுயநல அரசியல் தேவைகளுக்காக, தமது சொந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சி தோல்வி அடைவதற்காக மேற்கொண்ட குழிபறிப்பு வேலைகளும், சீர்குலைவு நடவடிக்கைகளும் ஆகும். இந்த உண்மையை ஒருபோதும் இல்லாத வகையில், ஜனாதிபதியின் சொந்த மாவட்டமான பொலநறுவையில் இம்முறை ஐ.தே.க. அதிக வாக்குகள் பெற்றதிலிருந்தே புரிந்து கொள்ளலாம்.

அடுத்ததாக, ஐ.தே.க. வெற்றி பெற்ற மாவட்டங்களில் அதன் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தது தமிழ் - முஸ்லிம் வாக்காளர்கள்தான் என்பதைப் புள்ளி விபரங்களைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். ஐ.ம.சு.கூ இற்கும், சிறுபான்மைத் தேசிய இனங்களுக்கும் இடையிலான விரிசல் சீர்செய்யப்படாத வரை பிற்போக்கு சக்திகள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்துவது தொடரவே செய்யும்.

அத்துடன், கடந்த 8 மாதங்களாக சட்ட விரோதமாக ஆட்சியில் இருந்த ஐ.தே.க. அரசாங்கம், ஜனாதிபதியின் ஆசிர்வாதத்துடன், ஊடகங்கள் உட்பட சகல அரச வளங்களையும் இந்தத் தேர்தலில் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி மக்களைத் தவறாகத் திசைதிருப்பி விட்டுள்ளன.

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க..

# காப்பபற்றப் படவேண்டியது, சிறீலங்கா சுதந்திரக்கட்சி!

'யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே' என்றே நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தல் முடிவுகளையும் தேர்தல் தினத்திற்கு சில நாட்களுக்கு முன்னர் மற்றும் இவ்வருடம் ஜனவரியிலிருந்து நிகழ்ந்த நிகழ்வுகளையும் சேர்த்து வர்ணிக்கலாம். அதாவது இந்த தேர்தல் முடிவுகள், இந்த முடிவுகளை தீர்மானித்த பின்னணிக் காரணிகள் மணியோசைகளை எழுப்பி இலங்கை மக்களுக்கு ஆபத்து ஒன்று வரவுள்ளதை எச்சரித்துள்ளது. இனி இலங்கையில் நிறைய அனர்த்தங்கள் நிகழ்வதற்கான வாய்ப்புகளுள்ளன.

இந்த தேர்தலில் ஆகக்கூடுதலான ஆசனங்களைப் பெற்று ஆட்சியமைக்கும் ஐக்கிய தேசியக் கட்சியினர் இலங்கை மக்களை உண்மையாக நேசிப்பவர்கள் கிடையாது என்பது இலங்கையின் வரலாற்றை திரும்பிப் பார்த்தால் தெரியும். இவர்கள் கடந்த 20 வருடங்களாக இலங்கையின் மைய ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு சகலவிதமான சூழ்ச்சிகளையும் செய்து, நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு அலைந்து திரிந்தவர்கள். இடையில் 2001 -2004 ஆண்டு காலப்பகுதியில் புலிகளுடனும் சர்வதேச ஏகாதிபத்தியங்களுடனும் கைகோர்த்து இலங்கையின் முழு அதிகாரத்தையும் கைப்பற்றும் திட்டத்துடன் இருந்தார்கள். ஆனால் அப்போது இவர்களிடம் பாராளுமன்ற ஆட்சியதிகாரம் மாத்திரமே இருந்தது. அத்துடன் நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதியுடன் பகைமை பூண்டு, இவர்கள் புலிகளுடனும் சர்வதேச ஏகாதிபத்தியங்களுடனும் ஒட்டி உறவாடினர். தெற்கில் எதிரெதிராக இரு ஆட்சி முறைகள் இருப்பதை சாதமாக்கிக்கொண்ட புலிகள், வடக்கிலும் கிழக்கிலும் மாத்திரமன்றி, இலங்கை முழுவதிலும் பயங்கரவாதத்தை விதைப்பதில் வெற்றி கண்டனர். இதனால் இவர்களிடமிருந்த பாராளுமன்ற ஆட்சியதிகாரம் அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவினால் பறிக்கப்பட்டது.

நிறைவேற்று அதிகாரங்கள் கொஞ்சம் குறைக்கப்பட்டு இப்போதுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன (பெயருக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவராக இருந்தாலும்) ஐக்கிய தேசியக்கட்சியே இந்தத் தேர்தலில் வெற்றி பெற வேண்டுமென்று விரும்பியிருந்தார். (ஆனால் அவர் விரும்பியவாறு ஐக்கிய தேசியக்கட்சி தனித்து ஆட்சியமைக்கக்கூடிய ஆசனங்கள் கிடைக்கவில்லை.) இதனால் ஜனாதிபதி – பிரதமர் - பாராளுமன்ற ஆட்சி முறைமைகள் சண்டைகள், சச்சரவின்றி இருக்குமென கொஞ்சம் எதிர்பார்க்கலாம். அத்துடன் ஐக்கிய தேசியக்கட்சி, தேர்தலில் வெற்றி பெற்ற ஆசனங்களின் எண்ணிக்கையில் இரண்டாமிடத்திலுள்ள சிறீலங்கா சுதந்திரக்கட்சியுடன் சேர்ந்து மந்திரிசபையை பங்கிடப்போகின்றது. இதற்கு 'தேசிய அரசாங்கம்' என்ற பெயரும் சூட்டப்பட்டுள்ளது.

ஏற்கனவே மைத்திரிபால சிறிசேன இவ்வருடம் ஜனவரியில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட போதும் 'தேசிய அரசாங்கம்' என்றொரு கூத்து அரங்கேறியது. அப்போது தன்னை ஜனாதிபதியாக தெரிவு செய்த ஐக்கிய தேசியக்கட்சியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் 'தேசிய அரசாங்கம்' உருவாக்கப்பட்டது. அது 7 மாதங்கள் உயிர் வாழ்ந்தது. ஆனால் நாட்டிற்கு உருப்படியாக ஒன்றையும் செய்யவில்லை. முழு நாடும் ஓர் ஆபத்தான சூழலில் இருக்கும் போதே 'தேசிய அரசாங்கம்' ஒன்றை உருவாக்க வேண்டிய தேவை இருக்கும். ஆனால் இலங்கை அவ்வாறான ஆபத்தான காலகட்டதில் இருக்கும் போதெல்லாம் 'தேசிய அரசாங்கம்' உருவாக்கப்படவில்லை. ஆனால் இப்போது எதற்கு? இதனை ஒரு 'கூட்டாட்சி' என்று சொல்ல ஏன் தயங்குகிறார்கள்?

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனவரியில் இந்த 'தேசிய அரசாங்கம்' என்ற பதத்தின் பின்னால் சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் ஒரு பகுதியினரை சோரம் போக வைத்தார். பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களைக் கொண்டிருந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பாராளுமன்ற ஆட்சியைப் பறித்து, குறைந்தளவு ஆசனங்களைக் கொண்டிருந்த ஐக்கிய தேசியக்கட்சியிடம் வழங்கிவிட்டு 'தேசிய அரசாங்கம்' அமைக்கப்பட்டுள்ளதாக அவர் வித்தை காட்டினார். ஆனால் அப்போது தன்னை ஜனாதிபதியாக்கிய ஐக்கிய தேசியக்கட்சி அடுத்து வரும் பாராளுமன்ற தேர்தலில் வெற்றி பெறச் செய்யவேண்டும் என்பதே அவரது நோக்கமாக இருந்தது. அவரது நோக்கம் இப்போழுது ஓரளவு நிறைவேறிய போதிலும், பாராளுமன்றத்தின் பெரும்பான்மைக்காக மீண்டும் சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் ஒரு பகுதியினரை சோரம் போக அழைக்கிறார். சிறிலங்கா சுதந்திரக்கட்சியை ஐக்கிய தேசியக்கட்சியினுள் கரைப்பதே இவரது நிகழ்ச்சி நிரலாக உள்ளது. இதனை இவர் தனித்து செய்ய முடியாது. இதற்கு இலங்கைக்கு உள்ளும் வெளியிலும் பல சக்திகள் பின்னணியில் உள்ளன. இலங்கையை நவகாலனித்துவ பிடியில் வைத்திருப்பதற்கு சிறீலங்கா சுதந்திரக்கட்சி 64 வருடங்கள் தடையாக இருந்து வருகிறது. இந்த கட்சியை காப்பாற்றுவதற்கு இக்கட்சியின் தலைமையை மாற்றுவதே ஒரேயொரு வழி. *

---



# வானவில்

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

sunvaanavil@gmail.com

இதுவரையில் வெளிவந்த வானவில் இதழ்களை **http://manikkural.wordpress.com/** என்ற இணையத்தள முகவரியில் வாசிக்கலாம்.

# கடலில் அக்கரை போவோரே....




இந்தப் பூமிப்பந்தின் மொத்தப் பரப்பில் மூன்றிலிரண்டு பங்கு கடல் கொண்ட பகுதி என்பது நம்மெல்லோருக்கும் தெரிந்த சங்கதி.

தரையில் மனிதர்கள், மிருகங்கள், பறவைகள், ஊர்வன, பறப்பன, மரங்கள், செடிகள், கொடிகள், புல்-பூண்டுகள் என பல நூறு கோடி ஜீவராசிகள் வாழ்கின்றன.

அதேபோல, கடலிலும் மீன்வகைகள், சிப்பி வகைகள், திமிங்கிலங்கள், டொல்பின்கள், கடல் தாவரங்கள் என பல நூறு கோடி ஜீவராசிகள் வாழ்கின்றன. இன்றைய உலகில் தரையில் விளையும் உணவுப் பொருட்கள் பல்வேறு காரணிகளால் பற்றாக்குறையாகி வரும் சூழ்நிலையில், மனிதனின் உணவுத் தேவையில் அரைக்கரைவாசியை கடல் உணவே கைகொடுத்து உதவுகின்றது. கடல் உணவு இல்லையேல் மனித குலத்தில் அரைவாசிப்பேர் பட்டினி கிடக்க வேண்டிய சூழல் ஏற்படும்.

பார்வைக்கு மனிதனுக்கு தரையில் நடைபெறும் வாழ்வுதான் முக்கியமானது எனத் தோன்றும். அது ஓரளவு உண்மையும்தான். ஆனால் கடலும் அதே அளவுக்கு முக்கியமான ஒன்று என்பதில் சந்தேகம் இல்லை.

இன்றைய உலகில் உணவிலிருந்து உபயோகப் பொருட்கள் வரை 90 வீதமானவை பூமியில்தான் மனிதர்களால் உருவாக்கப்படுகின்றன. ஆனால் அவை உலகெங்கும் பங்கீடு செய்யப்படுவதில் கடல் வழி மார்க்கமே பெரும் பங்கு வகிக்கின்றது.

## சிந்துபாத்

தற்போதைய கணிப்பீட்டின்படி, ஒரு இலட்சம் பெரிய அளவிலான வர்த்தகச் சரக்குக் கப்பல்களும், 40 இலட்சம் (4 மில்லியன்) மீன்பிடி மற்றும் சிறிய ரக சரக்குக் கப்பல்களும், இந்தப் பூமியின் ஐந்து கண்டங்களிலுமுள்ள கடல்களில் வலம் வருகின்றன.

அதேவேளையில், தரையில் நடப்பவை போல, கடலிலும் பல சட்ட விரோதச் செயற்பாடுகள் நடைபெற்ற வண்ணம் உள்ளன. எல்லைகள் தாண்டி மீன்பிடிப்பது என்பது இன்று உலகளாவிய ஒரு பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. அத்துடன் அதனுடன் இணைந்து சட்டவிரோதமான வழிமுறைகளைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதும் நடைமுறையாகி உள்ளது.

இதுதவிர, கடல்வழி மூலம் போதைப் பொருட்கள் கடத்துவது, ஆயுதங்கள் கடத்துவது, தங்கம் போன்ற பெறுமதியான பொருட்கள் கடத்துவது என்பனவும் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது.

இதுதவிர, கடந்த அரை நூற்றாண்டு காலமாக மனிதர்களை நாடுவிட்டு நாடு கடத்தும் சட்ட விரோதத் தொழில் நடைபெற்று வந்தாலும், அண்மைக் காலத்தில் அது அதிகரித்துள்ளது. மேற்குலகில் வசதியான வாழ்வு தேடுவோர், உள்நாட்டு யுத்தங்களால் பாதிக்கப்படுவோர், சர்வாதிகார ஆட்சி மற்றும் இன மத ஒடுக்குமுறைக்கு உள்ளாவோர், இந்த மனிதக் கடத்தல்காரர்களின் வலையில் மிகவும் சுலபமாகச் சிக்கி விடுகின்றனர். இந்த அப்பாவி மக்களில் அநேகமானோர் வாக்குறுதி அளிக்கப்பட்டபடி தமது இலக்கை அடைவதற்கு முதல் கடலில் மரணிக்கும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. ஆபிரிக்காவிலிருந்து மத்தியதரைக் கடலை ஊடறுத்து ஐரோப்பா நோக்கி வருபவர்களும், மியன்மாரின் (பர்மா) பௌத்த மேலாதிக்க இராணுவ ஆட்சியின் கொடுமைகளால் தப்பியோடும் அந்த நாட்டின் ‘ரொகிங்கியா’ முஸ்லீம் சிறுபான்மையினரும் அண்மைக்காலங்களில் ஆயிரக்கணக்கில் கடலில் மூழ்கி இறந்துள்ளனர்.

தொடர்ச்சி 5ம் பக்கம் பார்க்க...

# அமெரிக்க கடற்படைத் தளத்தில் மயங்கி விழுந்த இலங்கை அமைச்சர் மங்கள சமரவீர!

**சீ**னாவின் தென்கடல் பகுதியில், அமெரிக்க போர் விமானம் பறந்த பிரச்சினை, அந்தப் பகுதியில் போர் மேகம் சூழும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவின் தென் கடற்கரை, சர்வதேச வர்த்தகக் கப்பல் போக்குவரத்து மிகுந்தது. ஆகவே, போர் விமானங்கள் பறப்பதற்கு தடை விதித்துள்ள, சீனாவின் தென் கடல் பகுதியில் அமெரிக்காவின் படைக் கண்காணிப்பு விமானம் அண்மையில் வந்து கண்காணித்தது.

இதற்கு சீனா கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ள நிலையில், சர்வதேச வர்த்தகக் கப்பல் போக்குவரத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவே, அக்கடல் பகுதி மீது பறந்து கண்காணித்ததாக அமெரிக்கா அளித்த 'பெரியண்ணன்' தோரணை பதில், சீனாவிற்கு ஆத்திரமூட்டியுள்ளது. இதனால், சீனா மற்றும் அமெரிக்கா இடையே போர் மேகம் சூழத் துவங்கியுள்ளது.

இப்போர் துவங்கினால், இந்தியப் பெருங்கடலில் உள்ள இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட சில நாடுகள் பாதிக்கப்படலாம். ஏனென்றால், இந்தியப் பெருங்கடலில் இலங்கைக்கு அருகே உள்ள அமெரிக்காவிற்குச் சொந்தமான, 'டியாக்கோகார்சியா' கடற்படைத் தளத்தை அமெரிக்கா முழுவீச்சில் பயன்படுத்த வாய்ப்புள்ளது.

அமெரிக்கா அங்கு பிரமாண்டமான கடற்படைத் தளத்தை அமைத்துள்ளது. அங்கு போர் விமானங்கள் தரையிறங்க விமான ஓடுபாதை, செயற்கைக்கோள் தொலைத் தொடர்பகம், ரடார் நிலையம் உட்பட அனைத்து நவீன வசதிகளையும் அமைத்துள்ளது. அணுசக்தியில் இயங்கும் நவீன போர்க் கப்பல்களை நிறுத்துவது மற்றும் பராமரிப்பதற்கான



கட்டமைப்புகள் ஏற்படுத்தும் பணிகள் இந்தத் தீவில் அண்மையில் தொடங்கியுள்ளன.

இலக்கைக் குறிவைத்துத் தாக்கும் நவீன போர் விமானங்கள், மின்னல் வேகப் படகுகள், ஹெலிகாப்டர்கள் ஆகியவை கடந்த சில நாட்களாக இங்கு குவிக்கப்படுவதாகவும், அணுசக்தியில் இயங்கும் பிரமாண்டமான விமானம் தாங்கிக் கப்பல்கள் டியாகோகார்சியா துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளதாகவும், இலங்கை இராணுவ தலைமையகத்திற்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து இலங்கை கடற்படை உசார்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, இலங்கையுடன் சீனா இராணுவ ரீதியிலான நெருக்கம் வைத்திருப்பதால், சீனாவால் இலங்கையில் நிறைவேற்றப்பட்ட அம்பாந்தோட்டை துறைமுகம், கொழும்பு போர்ட் சிற்றி உள்ளிட்ட பிரமாண்ட அமைவிடங்கள் மீது அமெரிக்கரின் கடற்படையோ, விமானப்படையோ குண்டு வீசித் தாக்குதல் நடத்த வாய்ப்புள்ளது.

ஆகவே, போர் தொடங்கினால் இலங்கையின் கடற்பகுதிக்கு அருகே தமிழகக் கடலோரப் பகுதியில் உள்ள இராமநாதபுரம், தூத்துக்குடி, நாகை, புதுக்கோட்டை மற்றும் கேரளா மீனவர்கள் மீன்பிடித் தொழிலை தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டிய நிலை உருவாகலாம் என, இந்தியக் கடலோரக் காவற்படை அதிகாரி ஒருவர் தெிவித்தார்.

இலங்கைக்கு அருகே, இந்தியப் பெருங்கடல் பகுதியில் உள்ள அமெரிக்காவின் டியக்கோகார்சியா தீவு கடற்படைத் தளத்திற்கு அண்மையில் விமானத்தில் அழைத்துச் செல்லப்பட்ட இலங்கையின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, அங்குள்ள போர் விமானங்கள், கப்பல்களைப் பார்த்து அதிர்ச்சியில் மயங்கி விழுந்தார்.

இலங்கையின் தலைநகர் கொழும்பு கட்டுநாயக்க விமானநிலையத்திற்கு வந்த அமெரிக்க கடற்படையின் 'சி-2' ரக விமானத்திலிருந்த அதிகாரிகள் அழைத்ததால், இலங்கை வெளிவிவகாரத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, பாதுகாப்புத்துறை அமைச்சர் ருவான் விஜேரத்ன,

இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜயந்த பெரேரா மற்றும் அதிகாரிகள் அந்த விமானத்தில் ஏறினர்.

விமானத்திலிருந்து அவர்கள் இறங்கிய பின்னர்தான் தெரிந்தது, இவர்கள் வந்த விமானம் அமெரிக்க கடற்படையின், 'யு.எஸ்.எஸ். கார்ல் வின்சன்' என்ற பிரமாண்ட விமானம் தாங்கிக் கப்பலில் இறங்கியுள்ளது என்பது.

அணுசக்தியால் இயங்கும் அக்கப்பலின் விமான ஓடுதளத்தில் 90 போர் விமானங்கள், ஹெலிகாப்டர்கள் நின்றிருந்தன. 60 – 62 பணியாளர்கள், மாலுமிகள் மற்றும் அதிகாரிகள் பணியாற்றும் இக்கப்பலின் விமான ஓடுதளம் 333 மீட்டர் என அமெரிக்க கடற்படை அதிகாரி விளக்கிக் கொண்டிருந்த போதே, அமைச்சர் மங்கள சமரவீர திகைத்துப் போய் மயங்கி விழுந்துவிட்டார்.

அமைச்சர் மங்கள சமரவீர அண்மையில் சக அமைச்சர்களிடம் கூறுகையில், "இதுவரை ஆங்கிலத் திரைப்படங்களில் மட்டுமே பார்த்த காட்சிகளை டியாகோகார்சியாவில் நேரில் பார்த்த போது அதிர்ச்சியில் மயங்கிவிட்டேன்" என்றார்.

இலங்கை – சீனா நட்புறவு அதிகரிப்பதையும், நெருக்கமான போக்கையும், அமெரிக்கா மற்றும் இந்தியா விரும்பவில்லை.

'சீனாவுடன் இலங்கை நடபுறவாக உள்ளதால், அமெரிக்காவின் டியாகோகார்சியா இராணுவத் தளம் மற்றும் அதன் பலத்தை இலங்கைக்கு உணர்த்தவே, இலங்கை அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளை அமெரிக்கா அழைத்துச் சென்று காட்டியுள்ளது' என, இலங்கை அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

(மேற்குறிப்பிட்ட கட்டுரை 'கலைமகள்' சஞ்சிகையின் 2015 யூலை இதழில் வெளியான 'அமெரிக்கா – சீனா இடையே போர் வெடிக்குமா?' என்ற கட்டுரையின் முக்கியமான பகுதிகளாகும்) *

3ம் பக்கத்தொடர்ச்சி...

தவிர, ஆபிரிக்காவை அண்டிய கடற்பகுதிகளில் கடற்கொள்ளைக்காரர்களின் நடவடிக்கைகளும் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. பன்னாட்டு கடற்படைகள் அந்தப் பகுதிகளில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தாலும், 'அசகாய சூரர்களான' கடற்கொள்ளைக்காரர்களைக் கட்டுப்படுத்த முடியாமல் உலகம் திண்டாடுகிறது.

கடலின் சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் இன்னொரு கைங்கரியமும் நசுக்கிடாமல் மேற்கொள்ளப்படுகிறது. அணுக்கழிவுகள், இரசாயனக் கழிவுகள், தொழிற்சாலைக் கழிவுகள் என்பனவற்றை இரகசியமான முறையில் கடலில் கொட்டி வருகிறார்கள். அநேகமாக வளர்ந்த நாடுகளைச் சேர்ந்தவர்களே இந்த மனுக்குலத்துக்கு எதிரான நாசகார வேலையில் ஈடுபடுகிறார்கள்.

இதுதவிர, கடல் விபத்துகளும் அதிகளவில் நடைபெறுகின்றன. கடல் பாதுகாப்பு ஆய்வாளர்களின் தகவலின்படி, நான்கு நாட்களுக்கு ஒருமுறை ஒரு பெரிய கப்பல் பல்வேறு காரணிகளால் கடலில் மூழ்குகின்றது. அதன்காரணமாக வருடந்தோறும் 2,000 முதல் 4,000 வரையிலான மாலுமிகள் உயிரிழக்கின்றனர்.

இன்றைய உலகில் வட அமெரிக்காவும், ஐரோப்பிய வலயமுமே செல்வந்தப் பிராந்தியங்களாகத் திகழ்கின்றன. அதற்குக் காரணம் இந்த நாடுகளில் முதலில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியும், இந்த நாடுகள் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளைக் கைப்பற்றி அவற்றின் வளங்களைச் சுரண்டிக் கொழுத்ததும் ஆகும். ஆனால் அந்தக் காலம் மலையேறிவிட்டது. மேற்குலகின் முதலாளித்துவ அமைப்பு காலாவதி ஆகி வருகின்றது என்பதை ஐரோப்பிய வலயத்திலுள்ள கிரேக்கம் (Greece) உணர்த்தியுள்ளது.

ஒருகாலத்தில் கல்வியிலும், கலையிலும், விஞ்ஞானத்திலும், கப்பல் ஓட்டும் தொழிலிலும் சிறந்து விளங்கி, பல அறிஞர்களை உலகிற்கு அளித்த கிரேக்கம், இன்று அதன் முதலாளித்துவ அமைப்பு முறை காரணமாக வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது. கிரேக்கம் இன்று மேற்குலகம் என்ற ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறுப் பதமாக உள்ளது.

இருந்தும் பல நூறு ஆண்டுகளாக கப்பல் தொழிலில் கிரேக்கமே முன்னிலையில் இருந்து வருகின்றது. இன்றும் அது தொடர்கின்றது. உலகில் உள்ள பணக்கார கப்பல் கொம்பனிகளில் அரைவாசி கிரேக்கத்திலேயே உள்ளன. இந்தக் கப்பல் கொம்பனிகளை நடாத்தும் குடும்பங்களில் பெரும்பாலானவை துருக்கி எல்லையிலிருந்து 8 கிலோமீட்டர்கள் தூரத்தில் உள்ள CHIOS என்ற கிரேக்கத் தீவைச் சேர்ந்தவை. மூன்று தலைமுறைகளாக கப்பல் தொழிலில் ஈடுபட்டிருக்கும் மிகப்பெரிய பணக்காரக் குடும்பமான GEORGE KALLIMASIAS இந்தத் தீவைச் சேர்ந்ததே.

மனிதர்கள் தரையைப் பாழ்படுத்தியது போலவே, கடலையும் பாழ்படுத்தி வருகின்றனர். இந்த நிலைமையைக் கட்டுப்படுத்தத் தவறினால், பூமியும் அதன் சகோதரியான கடலும் கொந்தளித்து எழுந்து மனுக்குலத்தையே பூண்டோடு அழிக்கத் தயங்கா என்ற உண்மையை நாம் உணர்வது அவசியம்.

ஏனெனில், கடலும் தரையும் இணைந்தே இந்தப் பூமிப்பந்தின் வளத்தையும், சம நிலையையும், இருப்பையும் பாதுகாக்கின்றன. இந்த அடிப்படையான உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். *

ஒவ்வொருவரும் போர்முனையிலும், பொருளாதார முனையிலும், அரசியல் அல்லது கலாச்சார முனையிலும் போராளிகளாக மாற வேண்டும்.

- ஹோ சி மின்


# "பிரபாகரன் தேவைக்கேற்ற மாதிரி பேச்சை மாற்றுவார்!"

## - முன்னாள் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் நட்வர் சிங்

1987 யூலை 25 வாக்கில் இந்திய – இலங்கை ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுக் கொண்டிருந்தபோது, 7 ரேஸ் கோர்ஸ் சாலையில் நடந்த ஒரு கூட்டத்தில் நான் கலந்து கொள்ளப் பணிக்கப்பட்டேன். அந்த ஒப்பந்தம் கொழும்பில் யூலை 26 அன்று கையெழுத்தாக வேண்டும் என்று இந்தியா விரும்பியது. ஆனால் கொழும்பு அந்தத் தேதி மிக சீக்கிரமென்று கருதியது. அவர்கள் அந்த நிகழ்வை யூலை 29க்கு பிரதமர் தள்ளிப்போட வேண்டும் என்று விரும்பினார்கள். அப்போது வே.பிரபாகரன் அசோகா ஹோட்டலில் தங்கியிருந்தார் என்று கேள்விப்பட்டேன். பின்னாளில் அவரை நாங்கள் வீட்டுக் காவலில் வைத்திருந்ததாக அவர் கூறினார்.

பிரபாகரனை பிரதமர் சந்தித்திருக்கக் கூடாது என்பதே என் கருத்து. புலிகள் தலைவரிடம் எழுத்துப்பூர்வ உறுதிமொழி பெற்றீர்களா என்று கேட்டபோது எரிச்சலடைந்த பிரதமர், "அவர் எனக்கு வாக்களித்திருக்கிறார்" என்றார். பிரபாகரன் தேவைக்கேற்ற மாதிரி பேச்சை மாற்றுவார். இதை அவர் பலமுறை செய்திருக்கிறார்.

யூலை 29 அன்று ஒப்பந்தம் நிறைவேற்றப்படும் என்று இருதரப்பும் ஒத்துக் கொண்டன. மதியம் 3 மணிக்கு ஒப்பந்தம் கையெழுத்தானது. அதைத் தொடர்ந்து அதிபர் ஒரு வரவேற்பு விழா நடத்தினார். பி.வி.நரசிம்மராவும் நானும் விழாவுக்கு அழைக்கப்பட்டிருந்த இலங்கை அரசியல்வாதிகளுடன் பேசிக் கொண்டிருந்தபோது, ராஜீவும் அதிபர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனேவும் தீவிரமாக எதைப் பற்றியோ விவாதித்துக் கொண்டிருந்ததைக் கவனித்தோம். இந்தியா தன் படைகளை இலங்கைக்கு அனுப்பாவிட்டால் அன்று இரவே இலங்கையில் ஆட்சிக் கவிழ்ப்பு நடந்து விடும் என்ற தன் அச்சத்தை ஜெயவர்த்தனே அவரிடம் தெரிவித்தார். தில்லிக்குச் சென்றபின் தன் மூத்த அமைச்சரவை சகாக்களிடம் ஆலோசித்து முடிவெடுக்குமாறு பிரதமரிடம் கூறினேன். அவர் தான் ஏற்கெனவே இந்தியப் படைகளை உடனடியாக விமானம் வழியாக கொழும்புவுக்கு அனுப்புவதற்கான உத்தரவுகளை வழங்கிவிட்டதாக கூறினார். இலங்கையின் இனக்கலவரத்துக்குள் இந்தியா




கடுமையான வேகத்தில் இழுக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

o

இந்திய அமைதிப்படை ஆகஸ்டில் வந்தது. இரண்டே வாரங்களில் புலிகளையும் பிரபாகரனையும் துடைத்தெறிவோம் என்று இராணுவத் தளபதி சூளுரைத்தார். அது ஒரு முட்டாள்தனமான சுயதம்பட்டம். இந்திய அமைதிப்படைக்கு யாழ் தீபகற்பத்தைப் பற்றிய புவியியல் குறித்தோ, விடுதலைப் புலிகளின் பதுங்கும் இடங்கள் பற்றியோ விவரங்கள் தரப்படவில்லை.

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில் விருப்பமில்லாத விடுதலைப் புலிகள், 1987 யூலை — ஆகஸ்ட் முற்பகுதியில் சில இரகசிய உடன்படிக்கைகள் மூலம் தாஜா செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ள வைக்கப்பட்டதாக எப்போதும் ஒரு பேச்சு உண்டு. விடுதலைப் புலிகள், யூலை 25, 1987 வாக்கில் கையெழுத்தான இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை ஆதரிக்க இந்திய அரசு ஒரு பெரும் தொகையைத் தர ஒப்புக் கொண்டதாக 1988 ஏப்ரலில் தகவல் கசிந்தது. இந்தக் கசிவுக்கு காரணம் தேடியபோது, அந்தத் தேடல், இந்தியாவிலுள்ள கொழும்பு தூதரகம் மற்றும் ராஜீவ் காந்தியின் ஆலோசகர் ஜே.என்.தீட்சித் வரை இட்டுச் சென்றது. அந்தத் தகவல் கசிவு சிக்கலை தீவிரமாக்கும் முயற்சியாகப் பார்க்கப்பட்டது.

இறுதியாக முதல் தவணை மட்டுமே தரப்பட்டது. காரணம், ஒப்பந்தம் கையெழுத்தான மூன்று மாதங்களுக்குள் இந்திய அமைதிப்படையும் விடுதலைப் புலிகளும் யாழ்ப்பாணத்தில் போர் புரியத் தொடங்கிவிட்டன.

o

1987 வாக்கில் ராஜீவ் காந்தி அரசு அவசரத்திலிருந்தது. சில நேரங்களில் உக்கிரமானவராகத் தோன்றினாலும், நுட்பமான பிரச்சனைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு கண்டுவிட முடியும் என்று அவர் நம்பினார். இது தவிர்க்க முடியாமல் எதிர்பாராத விளைவுகளுக்கு வித்திட்டது.


1984இலிருந்து 1989 வரை ராஜீவ் தனது அமைச்சரவையை 20 முறைக்கு மேல் மாற்றியமைத்தார். ரயில்வே அமைச்சர் மாதவராவ் சிந்தியாதான் அவரது அமைச்சரவையில் ஐந்தாண்டுகள் நீடித்த ஒரே அமைச்சர்.

அவரது பதவிக்காலத்தில், வெளியுறவுத்துறை நான்கு அமைச்சர்களையும், நான்கு இணையமைச்சர்களையும் பார்த்தது. தனது முதல் 18 மாதங்களில் ராஜீவ் காந்தி, அறிவற்றவர்கள் மற்றும் அதிகம் ஆணவம் பிடித்தோர் குழுவைச் சார்ந்திருந்தார். ராஜீவ் காந்தியின் புகழையும் பிம்பத்தையும் அவர்கள் களங்கப்படுத்தினர்.

o

(மேலே தரப்பட்டுள்ள பகுதி இந்திய காங்கிரஸ் கட்சி அரசாங்கத்தில் வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்து, பின்னர் ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பாக பதவி நீக்கம் செய்யப்பட்ட நட்வார் சிங் எழுதி வெளியிட்ட, ''வன் லைஃப் இஸ் நொட் இனஃப்'' (One Life Is Not Enough) என்ற அவரது அரசியல் நினைவுக் குறிப்புகள் அடங்கிய நூலில் இருந்து எடுக்கப்பட்டதாகும். பிரதானமாக காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி பற்றியே இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ளது. தனக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டு சோனியா காந்தியின் திட்டமிட்ட ஒரு சதி என்பதே சிங்கின் வாதமாகும். பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்த நூலை வெளியிட வேண்டாம் எனக் கேட்டுக் கொள்வதற்காக, சோனியாவும் அவரது மகள் பிரியங்காவும் நட்வரின் வீடு தேடிச் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது) *

# இலங்கையில் விவசாய இரசாயனங்களால் 5 இலட்சம் பேருக்கு சிறுநீரக நோய் தாக்கம் ஏற்பட்டுள்ளது!




இலங்கையில் சுமார் 5 இலட்சம் பேர் சிறுநீரக நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. விவசாயத் தேவைகளுக்கு பயன்படுத்தப்படும் கிருமிநாசினிகள் மற்றும் உர வகைகளாலேயே இந்த நோய் ஏற்பட்டுள்ளதாக, இந்த நோய் பற்றி ஆராய்ந்த விஞ்ஞானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். அதேநேரத்தில், இந்த நோய் ஏற்படுவதற்கு ஐ.நா. சபையின் உணவு விவசாய ஸ்தாபனமே (FAO) காரணகர்த்தா என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. உணவு விவசாய ஸ்தாபனம் விவசாய இரசாயனங்களை (Agro Chemicals) உற்பத்தி செய்யும் பல்தேசிய கம்பனிகளை ஊக்கப்படுத்தி வருவதாகவும், அதனாலேயே அந்த இரசாயனங்களை இலங்கையில் பயன்படுத்தும் விவசாயிகள் இந்த வகையான நோய்களுக்கு ஆளாகி வருவதாகவும், சுவர்ண ஹன்சா பவுண்டேசன; (Swarna Hamsa Foundation) என்ற அபிவிருத்தி ஊக்குவிப்பு நிறுவனம் குற்றம் சாட்டியுள்ளது. எனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு விவசாய ஸ்தாபனம் இழப்பீடு வழங்க வேண்டும் எனவும், அவ்வாறு வழங்காவிடின் ஐ.நா. உணவு விவசாய ஸ்தாபனத்துக்கு எதிராகவும், இலங்கை அரசுக்கு எதிராகவும், “வெகுஜன இயக்கம்” ஒன்றை ஆரம்பிக்கப் போவதாகவும், அந்த அமைப்பு எச்சரித்துள்ளது.

ஆனால் தாங்கள் எவருடைய வியாபார நலன்களுக்காகவும் வேலை செய்பவர்கள் அல்ல என, இந்தக் குற்றச்சாட்டை உணவு விவசாய ஸ்தாபன அதிகாரி ஒருவர் மறுத்துள்ளதாக, கொழும்பில் உள்ள தமது நிருபர் தெரிவித்ததாக பிபிசி செய்தி சேவை தெரிவித்துள்ளது.

எது எப்படியிருந்த போதிலும், இலங்கையில் கடந்த 20 வருடங்களில் சுமார் 20,000 பேர் வரை இந்த சிறுநீரக நோயினால் இறந்துள்ளனர். அதைவிட 450,000 பேர் வரையிலானவர்கள் இந்த நோயின் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். இந்த நோயின் தாக்கம் குறித்து கருத்து தெரிவித்த சுவர்ண ஹன்சா பவுண்டேசன், இது முதலில் முற்றுமுழுதான விவசாய பிரதேசமான வட மத்திய மாகாணத்தில் தோன்றியதாகவும், பின்னர் இப்பொழுது இன்னொரு விவசாய பிரதேசமான தென் மாகாணத்திலும் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது. அங்குள்ள ஒரு கிராமத்தில் 50 வீதமான குடும்பங்கள் இந்நோய்க்கு ஆளாகி இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, இலங்கை அரசின் விவசாய அமைச்சு அதிகாரி ஒருவர், இந்த நோய் ஏற்பட்டுள்ள மாவட்டங்களின் நீர்தான் அதற்கு காரணம் என குறிப்பிட்டுள்ளார் (விவசாய இரசாயனங்களில் உள்ள நஞ்சுகள் நீரின் மூலம்தான் மக்களின் உடலை சென்றடையும் என்பதை இப்படி சொல்லாமல் சொல்கிறார் போலும்). அத்துடன் அரசாங்கம் அதிக நச்சு தாக்கம் உள்ள விவசாய இரசாயனங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், சில மாதங்களுக்கு முன்னர் அப்படியான மூன்று வகையானவற்றுக்கு இறக்குமதி தடை விதித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சிறுநீரக நோய் பற்றி மிகவும் கவனமாக ஆராய்ந்த உள்நாட்டு — வெளிநாட்டு விஞ்ஞானிகள், விவசாய இரசாயனங்களில் Cadmium, Arsenic போன்ற அதிக நச்சு தன்மையுள்ள toxic metals சேர்க்கப்படுவதாலேயே இந்த நோய் ஏற்படுவதாக கருத்து தெரிவித்துள்ளனர்.

இதேநேரத்தில், விவசாயத்துறையில் அதிக ஈடுபாடுள்ள வடக்கு கிழக்கு மாகாணங்களில் இந்த நோயின் தாக்கம் குறித்து ஆய்வுகள் எதுவும் செய்யப்பட்டதாக இதுவரை தகவல்கள் எதுவும் வெளிவர இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**- வீரக்கொடி**

## விதியின் வலிமை

எழுதிச் செல்லும் விதியின் கை
எழுதி எழுதி மேற் செல்லும்
தொழுது கெஞ்சி நின்றாலும்
சூழ்ச்சி பலவும் செய்தாலும்
வழுவிப் பின்னாய் நீங்கியொரு
வார்த்தை யேனும் மாற்றிடுமோ
அழுத கண்ணீர் ஆறெல்லாம்
அதிலோர் எழுத்தை
அழித்திடுமோ

**—11ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பாரசீக கவிஞர் உமர்கய்யாம் அவர்களின் ஒரு கவிதை**

# நறுக்கு நொறுக்கு NUTS

## இதயத்துக்கு இதமான செம்பருத்தி!

செம்பருத்தி...இது செம்பரத்தை, செவ்வரத்தை என்ற வேறு பெயர்களைக் கொண்டது. செம்பருத்தியின் பூவுக்கு நிறைய மருத்துவக் குணங்கள் உள்ளன. குறிப்பாக, இதய நோய்க்கு செம்பருத்திப்பூ அருமையான மருந்தாகும். காலையில் வெறும் வயிற்றில் ஒன்றிரண்டு செம்பருத்திப்பூவின் இதழ்களைச் சாப்பிட்டு வந்தால், காலப்போக்கில் இதய நோய் குணமாகும். அத்துடன் இதய நோயாளிகளுக்கு வரக்கூடிய படபடப்பு, வலி, இரத்தக்குழாய் அடைப்பு என்று அத்தனை பிரச்சினைகளையும் இந்த செம்பருத்திப்பூ சரிசெய்யக்கூடியது.

மாதவிடாய்க் கோளாறு உள்ள பெண்கள் செம்பருத்திப் பூக்களைத் தொடர்ந்து சாப்பிட்டு வருவதால் பிரச்சினைகள் தீருவதோடு கர்ப்பப்பை குறைபாடுகள் சரியாகும். செம்பருத்திப் பூக்களை தலைக்குத் தேய்க்கும் சிகைக்காய் பொடியுடன் சேர்த்துப் பயன்படுத்தினால், பொடுகு, முடி உதிர்தல், இளநரை போன்ற பிரச்சினைகள் சரியாகும்.

*நன்றி: அவள் விகடன்*

## காதலர் தினம் பிறந்த கதை

ரோம் நாட்டுப் போர் வீரர்கள் திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்பது அந்த நாட்டுச் சக்கரவர்த்தியின் கட்டளை. போர் வீரர்களுக்கும் அவர்கள் விருப்பப்பட்ட பெண்களுக்கும் சக்கரவர்த்திக்குத் தெரியாமல் திருமணம் செய்து வைத்தார் ஒரு பாதிரியார். அவர் பெயர் செயின்ட் வலன்டைன். சக்கரவர்த்தியின் காதுக்கு இந்த விடயம் எட்டியவுடன், பாதிரியாருக்கு மரண தண்டனை அளிக்குமாறு கட்டளை இட்டார். வாலன்டைனுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட நாளான பிப்ரவரி 14ஆம் தேதியை காதலர் தினம் அல்லது வலன்டைன் தினம் என்று ரோமானிய போர் வீரர்கள் கொண்டாடினர். அதை நாளடைவில் உலகெங்கும் காதலர்கள் கொண்டாடத் தொடங்கினர்.

*நன்றி: மங்கையர் மலர்*

## அரபு மொழியிலும் திருக்குறள்!

திருக்குறள் இதுவரை உலகின் 35 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இப்பொழுது அது அரபு மொழியிலும் வெளிவந்துள்ளது. அதன் வெளியீட்டு விழா சவுதி அரேபியாவில் அண்மையில் நடைபெற்றது.

அதை அரபு மொழியில் மொழிபெயர்த்த சென்னைப் பல்கலைக்கழக அரபுத் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் ஜாஹிர் ஹுசைன் பின்வருமாறு கூறியிருக்கிறார்:

“எல்லா மதங்களுக்கும் பொருந்தி வரும் வகையில் உலகப் பொதுமறையாக அதைப் படைத்திருக்கிறார் வள்ளுவர். குறளின் மூலமாக வள்ளுவர் சொல்லும் பல கருத்துக்கள் புனித குர்ஆனோடு உடன்பட்டுப் போகிற வகையில் இருப்பது குறிப்பித்தக்கது.”

## 20 வருடமாக ஓடும் படம்!

சாருக்கான் - கஜோல் இணைந்து நடித்த ‘தில்வாலே துல்ஹனியா லே ஜாயேங்கே’ என்ற திரைப்படம் மும்பையில் ‘மராட்டா மந்திர்’ என்ற தியேட்டரில் 1995ஆம் ஆண்டு திரையிடப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை தொடர்ந்து 20ஆவது வருடத்தை நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறது. 2.95 கோடி செலவில் தயாரிக்கப்பட்ட இந்தப் படம் பல ஆயிரம் கோடிகளைத் தாண்டி இன்னும் சம்பாதித்துக் கொண்டேயிருக்கிறது.

## ஹிட்லரிடம் உணவு கேட்ட முசோலினி!

இரண்டாம் உலக யுத்த காலத்தில் ஒருபக்கத்தில் ஹிட்லரின் நாஜி ஜேர்மனி, முசோலினியின் பாசிச இத்தாலி, யப்பானிய ஏகாதிபத்தியம் என்பன ஒரு அணியாகவும், மறுபக்கத்தில் சோவியத் யூனியன், அமெரிக்கா, இங்கிலாந்து என்பன ஒரு அணியாகவும் எதிரும் புதிருமாகப் போரிட்டன.

போரின் ஒரு கட்டத்தில் இத்தாலிய சர்வாதிகாரி முசோலினியின் படைகளுக்கு உணவுத் தட்டுப்பாடு வந்துவிட்டது. எனவே முசோலினி தனது கூட்டாளியான ஜேர்மனியின் சர்வாதிகாரி ஹிட்லருக்கு “உடனடியாக உணவு அனுப்பி வையுங்கள்” என ஒரு அவசரச் செய்தியை அனுப்பினான். அதற்கு ஹிட்லர், “இங்கும் நிலைமை மோசம். எனவே வயிற்றில் உள்ள பட்டியை (பெல்ற்) இறுக்குங்கள்” எனப் பதில் அனுப்பினான்.

அந்தப் பதிலைக் கண்டு துவண்டு போன முசோலினி, “தயவுசெய்து பெல்ற்றையாவது அனுப்பி வையுங்கள்” எனப் பதில் அனுப்பினானாம்!

## ஆங்கிலேயருக்கு சீதனமாக வழங்கப்பட்ட 10 பவுண்ட் பெறுமதியான பம்பாய்!

16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கீசியர் பம்பாயை (இன்றைய மும்பாய்) கைப்பற்றினர். பின்பு 1661இல் போர்த்துகீசிய இளவரசி கேதரின் டிப்ராகன்சா என்பவரை இங்கிலாந்து இளவரசர் இரண்டாம் சார்ள்சுக்கு மணமுடித்துக் கொடுத்த போது, மணப்பெண்ணுக்கு சீதனமாக பம்பாய் நகரை போர்த்துக்கீசியர் ஆங்கிலேயருக்கு வழங்கினர். வரதட்சணையாக தனக்கு வழங்கப்பட்ட பம்பாயை கிழக்கிந்திய கம்பனிக்கு வருடத்திற்கு 10 பவுண்ட் வாடகைக்கு விட்டார். நாளடைவில் அது ஆங்கிலேயருக்குச் சொந்தமானது.

*நன்றி: மங்கையர் மலர்*

# மூலதனம் நூலை 40 வருடங்களாக எழுதிய மார்க்ஸ்!

மார்க்சியத்தின் தந்தை கார்ல் மாக்ஸ் 1818 மே 5ஆம் திகதி அன்றைய பிரஸ்யாவின் (இன்றைய ஜேர்மனி) ரைன் மாநிலத்தில் உள்ள டிரியர் நகரில் பிறந்தார். 1883இல் மரணமடைந்தார்.

மார்க்சின் பிரமாண்டமான படைப்பான 'மூலதனம்' எனும் நூலை எழுதி முடிக்க அவருக்கு 40 ஆண்டுகள் பிடித்தன. அதன் மூலப் பிரதி சுமார் 30 முதல் 35 வரையிலான தொகுதிகள் அடங்கியது. இந்த நூலே மார்க்சியத்தின் அரிச்சுவடியாக இன்றுவரை உள்ளது. மார்க்ஸ் காலமான பின்னர், இந்த நூலின் மார்க்ஸ்சால் எழுதி முடிக்கப்படாத இறுதிப் பகுதியை, அவரது நெருங்கிய தோழரான பிரெடரிக் ஏங்கெல்ஸ் எழுதிப் பூர்த்தி செய்தார். இதற்கு இணையான நூல் இன்றுவரை வேறு எவராலும் எழுதப்படவில்லை.

விஞ்ஞானபூர்வமானதும், தர்க்க ரீதியிலானதும், உண்மைகளை அடிப்படையாகவும் கொண்ட இந்த நூலை எழுதுவதற்காக, மார்க்ஸ் செய்த ஆய்வுகளுக்கு லண்டன் பொது நூலகத்தையே பெரிதும் பயன்படுத்தினார்.

# திடீரென மாரடைப்பு வந்தால் என்ன செய்ய வேண்டும்?

மாரடைப்பு எப்போது வரும் என்று யாருக்கும் தெரியாது.

தனியாக இருக்கும்போது மாரடைப்பு வந்தால் கடினம்.அந்நேரத்தில் நீங்கள் மிகவும் படபடப்பாகவும், தொய்வாகவும் உள்ளீர்கள், திடீரென்று உங்கள் இதயத்தில் அதிக வலி ஏற்படுவதை உணர்கிறீர்கள், அந்த வலியானது மேல் கை முதல் தோள்பட்டை வரை பரவுவதை உணருகிறீர்கள். உங்கள் இதயம் தாறுமாறாக துடிக்கிறது, நீங்கள் சுயநினைவை இழக்க வெறும் 10 நொடிகள் தான் உள்ளது. இப்போது நீங்கள் செய்ய வேண்டியது தொடர்ச்சியாக மிக ஆக்ரோஷமாக இரும வேண்டும், ஒவ்வொரு முறை இருமும் போதும், அதற்கு முன்னரும் மூச்சை இழுத்து விட வேண்டும், இருமல் மிக ஆழமானதாக இருக்க வேண்டும். இருதயம் இயல்பு நிலை திரும்பும் வரையிலோ அல்லது வேறொருவர் உதவிக்கு வரும் வரையிலோ ஒவ்வொரு இரண்டு நொடிக்கும் மூச்சை இழுத்து விட்டு இருமிக் கொண்டே இருக்க வேண்டும். மூச்சை இழுத்து விடுவதினால் நுரையீரலுக்கு ஒட்சிசன் சீராக செல்ல வழி வகுக்கிறது. இருமுவதால் இருதயம் நிற்பதில் இருந்து தொடர்ச்சியாக துடித்துக் கொண்டே இருக்க உதவும். இதனால் இரத்த ஓட்டம் சீரடையும், இருமுவதால் ஏற்படும் அதிர்வினால் இதயம் சீராக துடிக்கும், பின்னர் இருதயம் சீரடைந்ததும் அருகில் உள்ள மருத்துவமனைக்கு செல்லலாம்.

# மொழி உரிமைப் போர் செய்வோர் கவனத்துக்கு...

இந்தியாவில் இந்தி, ஆங்கிலம் உட்பட 24 மொழிகள் தேசிய மொழிகளாக அங்கீகாரம் பெற்றுள்ளன. அதேவேளை 2011ல் நடாத்தப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, 1,635 வட்டார மொழிகளை இந்தியா முழுவதுமுள்ள மக்கள் தாய் மொழியாகப் பேசுகின்றனர் எனத் தெரிய வந்துள்ளது. இத்தனை மொழி பேசுபவர்களும் தத்தமது மொழிக்கு தேசிய அந்தஸ்துக் கோரினால் இந்தியா என்னாவது?

## நமது வீட்டிலுள்ள நோய்களைக் குணப்படுத்தும் மருந்துகள்

**தேன்:** சக்தியை கொடுக்கும், இதயத்தை பலப்படுத்தும், இருமலை குணப்படுத்தும், ஹிமோகுளோபினை (himoglobin) அதிகப்படுத்தும்.

**வெந்தயம்:** இரத்தத்தில் உள்ள சீனியையும், சிறுநீரில் உள்ள சீனியையும் குணமாக்கும்.

**துளசி:** தினமும் துளசி சாப்பிட்டு வந்தால் இரத்தத்திலுள்ள விஷத்தன்மையை வெளியேற்றி சுத்தம் செய்கிறது.

**பூண்டு:** வயிற்றில் உண்டாக்கும் வாயு கோளாறுகள் அனைத்தையும் போக்கும் தன்மை கொண்டது.

**இளநீர்:** உடலில் உள்ள வெப்பத்தை தணிக்கும். வயிற்றுப்போக்கு, சின்னம்மை, பெரியம்மை போன்ற நோய்களுக்கு சிறந்த பானம்.

**வெண்ணெய்:** வாய் மற்றும் வயிற்று புண்களை குணப்படுத்தும்.

**மிளகு:** இரத்த குழாய்களில் படியும் கொழுப்பை கரைக்கும் தன்மை மிளகுக்கு உண்டு.

**சோம்பு:** இது சமிபாட்டினை துரிதப்படுத்துகிறது.

**காளான்:** தினமும் காளான் சூப் அருந்துவதால் பெண்களுக்கு உண்டாகும் மார்பக புற்றுநோய் தடுக்கப்படுகிறது. இரத்தம் சுத்தமடைகிறது.

**சிவப்பு முள்ளங்கி:** வயிற்று புண்ணை அகற்றும், மஞ்சள்காமாலைக்கு மிகவும் சிறந்த மருந்து.

**வாழைத்தண்டு:** சிறுநீரகத்தில் தோன்றும் கற்களை கரைக்கும். உடல் பருமனை குறைக்கும். சலரோக வியாதியை கட்டுப்படுத்தும்.

**முட்டைக்கோஸ்:** புற்றுநோய் வராமல் தடுக்கும். தொற்று நோய் வராமல் தடுக்கும். உடலுக்கு குளிர்ச்சியை தரும்.

**பாகற்காய்:** சலரோக வியாதிக்கு நல்லது. வாய்நாற்றம் போக்கும். வயிற்றுப்பூச்சியை கொல்லும்.

**பச்சைபட்டாணி:** உடலுக்கு வலிமையும், புத்துணர்ச்சியையும் தரும். குடல் புண்களை ஆற்றும், களைப்பை நீக்கும்

# வண்ண வண்ணக் கிளிகள்!

உலகம் முழுவதும் 315 வகையான கிளிகள் உள்ளன. ஆபிரிக்காவிலுள்ள 'க்ரே பரட்' என்ற கிளிக்கு நான்கு வயது குழந்தைக்குரிய அறிவு உள்ளது. நூற்றுக்கும் மேற்பட்ட வார்த்தைகளை நினைவில் வைத்துச் சொல்லும். இவை 50 ஆண்டுகள் வாழும். மனிதர்களின் பேச்சை அப்படியே இமிடேட் செய்து பேசும் ஆற்றல் கொண்டவை.

# சிறீலங்கா சுதந்திரக் கட்சி வலதுசாரித் தலைமை இடதுசாரிகளையும் தூக்கி வீசியது!

இலங்கையின் அரசியல் வரலாற்றில், சுதந்திரத்துக்கு முன்பும் பின்பும் இடதுசாரிக் கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சிக்கும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக்கும் தனித்துவமான ஒரு அரசியல் வரலாற்றுப் பாத்திரம் இருந்து வந்துள்ளது. அவர்களது கொள்கை, நடைமுறை மற்றும் தந்திரோபாயத் தவறுகளால் ஆட்சி அதிகாரத்தைப் பிடிக்க முடியாவிட்டாலும், பண்டாரநாயக்க அரசுகள் மேற்கொண்ட அனைத்து முற்போக்கான நடவடிக்கைகளுக்கும் இடதுசாரிக் கட்சிகளின் பங்களிப்பே பின்னணியில் இருந்து வந்ததை எவரும் மறுத்துவிட முடியாது.

1956இல் பண்டாரநாயக்கவின் தலைமையில் இலங்கையில் ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசு முதன்முதலாக ஏற்பட்ட போது, அவ்வரசில் இடதுசாரிகள் இணைந்து கொள்ளாவிட்டாலும், அவ்வரசு எடுத்த சகல ஏகாதிபத்திய எதிர்ப்பு, முற்போக்கு நடவடிக்கைகளையும் இடதுசாரிகள் பரிபூரணமாக ஆதரித்தனர்.

பண்டாரநாயக்க பிற்போக்கு சக்திகளால் 1959இல் படுகொலை செய்யப்பட்ட பின்னர் 1960, 1970, 1994, 2000, 2005, 2010களில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் அமைந்த அரசுகளில், இடதுசாரிக் கட்சிகள் இரண்டும் இணைந்து பல முற்போக்குத் திட்டங்களை நிறைவேற்ற உறுதுணை புரிந்தன. அதுமட்டுமல்லாமல், தமிழ் மக்களின் ஜனநாயக வாழ்வை அழித்தொழித்த பாசிசப் புலிகளை ஒழித்துக் கட்டும் நடவடிக்கைகளிலும் இடதுசாரிக் கட்சிகள் பூரண ஆதரவு வழங்கிய அதேவேளையில், தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு ஒரு நியாயமான நிரந்தரத் தீர்வு காணும்படியும் வலியுறுத்தி வந்துள்ளன.

இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவு இல்லாமல் சிறீலங்கா சுதந்திரக் கட்சியால் தேர்தல்களில் தனித்து நின்று ஒருபோதும் வெற்றி பெற முடியாது என்பதை, 1977 பொதுத் தேர்தல் நிரூபித்தது. (அத்தேர்தலில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிட்டு ஆக 8 ஆசனங்களே பெற்றது!)

இந்த நிலைமையில், கடந்த 50 வருட அரசியல் வரலாற்றில் முதல் தடவையாக சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தற்போதைய தலைமை இடதுசாரிக் கட்சிகளான சமசமாஜக் கட்சியையும், கம்யூனிஸ்ட் கட்சியையும் ஒதுக்கித் தள்ளியுள்ளது. பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பால் தேர்தல் ஆணையாளரிடம் கையளித்த தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பட்டியலில் இடம் பெற்றிருந்த சமசமாஜக் கட்சிப் பிரதிநிதி பேராசிரியர் திஸ்ஸ விதாரணவினதும், கம்யூனிஸ்ட் கட்சிப் பிரதிநிதி டியு குணசேகரவினதும் பெயர்களை, புதிதாக சுதந்திரக் கட்சிக்குள் ஆதிக்கம் செலுத்தும் வலதுசாரிக் கோஷ்டியான சந்திரிக – மைத்திபால அணி நீக்கியுள்ளது. அதன் மூலம் அந்த இரு இடதுசாரிக் கட்சிகளும் நாடாளுமன்றத்தில் இடம் பெறுவதை தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இது மிகவும் பாராதூரமான ஒரு அரசியல் நிலைமை. இது வெறுமனே ஒரு பதவி சம்பந்தப்பட்ட தீர்மானம் மட்டும் அல்ல. சர்வதேச ஏகாதிபத்திய சக்திகள் இலங்கையில் ஜனவரி 8ஆம் திகதி ஒரு எதிர்ப்புரட்சி ஆட்சி மாற்றத்தை நிகழ்த்திய பின்னர், வலதுசாரி ஐ.தே.க. மூலமும், சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஆதிக்கம் பெற்றுள்ள சந்திரிக – மைத்திரி வலதுசாரி அணி மூலமும் தொடர்ந்தும் மேற்கொண்டு வரும் பிற்போக்கு வலதுசாரி நடவடிக்கைகளின் ஒரு தொடர்ச்சியே இதுவாகும்.

நாட்டில் உருவாகி வரும் இந்த அபாயகரமான வலதுசாரி பாசிச அபாயம் குறித்து, சகல இடதுசாரிக் கட்சிகளும் கவனத்தில் எடுத்துச் செயல்படத் தவறினால், இந்தோனேசியா, சிலி போன்ற நாடுகளில் உருவானது போன்ற ஒரு நிலை உருவாகாலாம். ஆனால் துரதிருஸ்டவசமாக, இடதுசாரிகள் என்று தம்மைக் கூறிக் கொள்ளும் ஜே.வி.பி, முன்னிலை சோசலிசக் கட்சி போன்ற குட்டி முதலாளித்துவ அமைப்புகளும், அதிதீவிர ரொட்ஸ்சியவாதக் குழுக்களும், தம்மை மாஓவிஸ்ட்டுகள் என்று சொல்லிக் கொள்ளும் இடதுசாரி ஒருமுனைவாதக் குழுக்களும், தற்போதைய ஏகாதிபத்திய சார்பு அரசை எதிர்ப்பதை விட, அரசியல் தெளிவின்மை அல்லது சந்தர்ப்பவாதம் காரணமாக மகிந்த ராஜபக்ச தலைமையிலான உண்மையான சிறீலங்கா சுதந்திரக் கட்சி அணியினரை எதிர்ப்பதிலேயே அக்கறையாக உள்ளனர்.

இன்றைய இலங்கையின் மாறிய அரசியல் சூழ்நிலையில் எல்லாவற்றிலுமே ஒரு மாற்றம் தேவைப்படுகிறது. அதாவது –


சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் மாற்றம் வேண்டும் அல்லது அதன் உண்மையான கொள்கைகளை முன்னெடுத்துச் செல்லும் புதிய அமைப்பு உருவாக்கப்பட வேண்டிய தேவையுள்ளது.

அதேபோல, இடதுசாரிக் கட்சிகளிலும் மாற்றம் வேண்டும் அல்லது பழையனவற்றின் இடத்தில் புதிய உண்மையான மார்க்சிச கட்சி ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.
இந்த நிலைமை தமிழ் மக்களுக்கும் பொருத்தமானதே. இப்பொழுதுள்ள உளுத்துப் போன, இனவாத, பிற்போக்கு, கிழடு தட்டிய தலைமை மாற்றப்பட்டு, உண்மையான தமிழ் தேசிய ஜனநாயகத் தலைமை உருவாக்கப்பட வேண்டும்.

மக்களே வரலாற்றை உருவாக்குபவர்கள் என்ற அடிப்படையில், தலைமைகள் குறுக்கே நின்றாலும், மக்களை சரியான கருத்துக்கள் சென்றடையுமாக இருந்தால், அவர்களே புதிய வரலாற்றை உருவாக்குவர்.

**–செவ்வண்ணன்**

# சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமை வலதுசாரிகளின் பிடியில் சிக்கியுள்ளது!



இலங்கையில் இவ்வருடம் ஜனவரி 08ம் திகதி நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது ஆரம்பித்த அரசியல் சதி சூழ்ச்சி நடவடிக்கைகள், அண்மையில் ஓகஸ்ட் 17ம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலிலும் அரங்கேற்றப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகளில் கடந்த காலங்கள் போல ஐக்கிய தேசிய கட்சி (ஐ.தே.க) பெரும் பங்கு எதனையும் வகிக்கவில்லை. அந்தக் கட்சிக்கு பதிலாக பண்டாரநாயக்க — சிறீமாவோ தம்பதிகளின் புதல்வியும், முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிக குமாரதுங்கவே நாடகத்தின் பிரதான கதாபாத்திரமாக இருந்து விடயங்களை நடாத்தி முடித்துள்ளார்.

ஆரம்பத்தில் இருந்தே இலங்கை அரசியல் வரலாறு காணாத துரோக செயல்பாடுகள் நிகழ்த்தப்பட்டு வந்துள்ளன. உண்மையில் கழுத்தறுப்புகளுக்கும், சூழ்ச்சிகளுக்கும், கட்சி தாவல்களுக்கும் பெயர்போன இந்திய அரசியல்வாதிகளே மூக்கில் விரலை வைத்து அதிசயப்படும் அளவுக்கு, இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினதும் சந்திரிகாவினதும் நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஒன்றை கொண்டுவர வேண்டும் என்ற தேவை மூன்று தரப்புகளுக்கு இருந்தது. அதில் ஒரு தரப்பு சர்வதேச — பிராந்திய வல்லாதிக்க சக்திகள் (மேற்கு மற்றும் இந்தியா). இரண்டாவது தரப்பு சர்வதேச வல்லாதிக்க சக்திகளுக்கு காலம்காலமாக உள்நாட்டு தரகர்களாக செயற்பட்டு வந்த தரகு முதலாளித்துவ பிற்போக்கு ஐ.தே.க. மூன்றாவது தரப்பு மகிந்த ராஜபக்ச 'குடும்பத்திடமிருந்து' சிறீலங்கா சுதந்திர கட்சியினதும் (சிறீ.ல.சு.க), நாட்டினதும் அதிகாரத்தை மீண்டும் தனது பண்டாரநாயக்க குடும்பத்தின் கைகளுக்கு எடுக்க வேண்டும் என அவா கொண்டிருந்த சந்திரிக.

இதை சற்று விரிவாக பார்க்கலாம்.

மேற்கத்தைய வல்லாதிக்க சக்திகளுக்கு இலங்கையில் ஒரு ஆட்சி மாற்றம் அவசியமாக இருந்தது. காரணம், ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இடதுசாரிகளும் உள்ளடங்கியிருந்த அரசு, அடிப்படையில் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வை கொண்டிருந்தது. அதேவேளையில், சீனா, ரஸ்யா, ஈரான், வியட்நாம், கியூபா, வெனிசூலா என மேற்கத்தைய எதிர்ப்பு நாடுகளுடன் அது நெருக்கமான நட்புறவையும் வளர்த்து வந்தது. அதுமட்டுமின்றி, சர்வதேச வல்லாதிக்க சக்திகளினால் பாலூட்டி வளர்க்கப்பட்டு வந்த பாசிச புலிகள் இயக்கத்தையும் அது ஈவு இரக்கமில்லாமல் நிர்மூலம் செய்தது.

மகிந்த அரசின் இந்த நடவடிக்கைகள் உலக ஏகாதிபத்திய சக்திகளின் சீனாவை சுற்றி வளைத்து ஆசியாவை ஆதிக்கம் செய்யும் திட்டத்துக்கு பாதகமாக இருந்தன. அதனால் அவர்கள் இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுகிறது, ஊடக சுதந்திரம் நசுக்கப்படுகிறது, குடும்ப ஆட்சி நடைபெறுகிறது, ஊழல் மற்றும் அதிகாரத் துஸ்பிரயோகம் கொடிகட்டிப் பறக்கிறது, போர்க் குற்றம் இழைக்கப்பட்டுள்ளது என முன்னைய ஆட்சியின் மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளைச் சுமத்தின.

அந்த சக்திகளின் குற்றச்சாட்டுகளை காலம் காலமாக ஏகாதிபத்தியத்துக்கு சேவகம் செய்து வரும் ஐ.தே.கவும் கிளிப்பிள்ளை போலத் திருப்பிச் சொன்னது. இருந்தாலும் முன்னைய காலங்கள் போல ஐ.தே.கவால் இலங்கை மக்களுக்கு ஒரு மாற்றுத் தலைமையைக் கொடுக்க முடியவில்லை.

அதற்குக் காரணம், ஐ.தே.க. விதேசிய சார்பு கட்சி, புலிகளுடன் தொடர்புள்ள கட்சி, சரியான தலைமைத்துவம் இல்லாத, உள் முரண்பாடுகளால் சிதைந்து போன ஒரு கட்சி, என்ற பிம்பம் நாட்டு மக்களிடையே ஏற்பட்டிருந்தது. அதனால் அது அடுத்து அடுத்து பல தேர்தல்களில் தோல்வி அடைந்து வந்தது. அந்தக் கட்சிக்கு அரசியல் எதிர்காலம் இல்லை என்ற அளவுக்கு சிதைந்து போயிருந்தது.

ஒரு மாற்று ஏற்பாடாக, 2005இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது இந்த தேச விரோத சக்திகள் புலிகளுக்கு எதிரான போரின் ஒரு வெற்றிப் பங்காளியான முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகவை மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக நிறுத்திப் பார்த்தன. ஆனால் அவரால் அவர்களுடைய நோக்கத்தை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது.

இந்தச் சூழ்நிலையில்தான், அவர்கள் புதிய வியூகம் ஒன்றை முற்போக்கு சக்திகளுக்கு எதிராக வகுத்தனர். அதாவது வழமை போல ஐ.தே.கவை மட்டும் நம்பியிருக்காது, சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள ஒரு பிரிவை (வலதுசாரி அணியினர்) உடைத்து எடுப்பதுடன், ஜே.வி.பி, ஜாதிக ஹெல உருமய போன்ற அரசுக்கெதிரான சக்திகளையும், மகிந்த அரசில் அதிருப்தி கொண்டிருந்த சிறுபான்மை இனக் கட்சிகளையும், அரச சார்பற்ற நிறுவனங்களையும் ஓரணியில் திரட்டுவதன் மூலம், முற்போக்கு சக்திகள்

சார்பான ஜனாதிபதி வேட்பாளரைத் தோற்கடிப்பதே அத்திட்டம்.

இந்த இடத்தில்தான் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக குமாரதுங்கவின் பங்களிப்பு முக்கியத்துவம் பெறுகிறது. 2005இல் தவிர்க்க முடியாத சூழலில் (குடும்ப அரசியல் வாரிசு இல்லாத நிலைமையில்) சந்திரிக சிறீ.ல.சு.கவின் தலைமையை மகிந்த ராஜபக்சவிடம் ஒப்படைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. (அச்சொட்டாக இவ்வகையான ஒரு சூழலில்தான் அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ஐ.தே.கவின் தலைமைப் பதவியை ஆர்.பிரேமதாசவிடம் ஒப்படைத்தார் என்பதும் நினைவு கூரத்தக்கது).

கட்சித் தலைமையை மகிந்தவிடம் ஒப்படைத்த சந்திரிக சும்மா இருக்கவில்லை. அவர் அடுத்த 9 வருடங்களாக இலங்கையில் இருந்ததை விட உலகம் சுற்றியதுதான் அதிகம். முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி கிளின்டனின் பெயரில் செயற்படும் 'கிளின்டன் நிறுவனம்' என்ற அமைப்பில் உறுப்பினராக இருந்த சந்திரிக, அதன் கூட்டங்களுக்கு அடிக்கடி வெளிநாடு போய் வந்தார். அதுபோல வேறு சில சர்வதேசக் கூட்டங்களுக்கும் போய் வந்தார். அவரது பிள்ளைகள் இருவரும் லண்டனில் வசிப்பதால், அங்கும் அடிக்கடி சென்று தங்கினார். (சந்திரிகவுக்கு சொந்தமாக லண்டனில் ஒரு வீடு உண்டு என்ற கதையும் உண்டு) இந்தக் காலகட்டத்தில்தான், சந்திரிகவை சூத்திரதாரியாக வைத்து இலங்கையில் ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு சர்வதேச சக்திகள் திட்டமிட்டன என நம்பப்படுகிறது. (அவர்களது இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அனுகூலமாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் நடவடிக்கைகளும் அமைந்துவிட்டன என்பது இன்னொரு விடயம்)

சந்திரிகவே தனது அரசிலும், மகிந்தவின் அரசிலும் சிரேஸ்ட அமைச்சராகவும், சிறீ.ல.சு.கவின் பொதுச் செயலாளராகவும் இருந்த மைத்திரிபால சிறிசேனவை உடைத்தெடுத்து எதிரணியின் பொது ஜனாதிபதி வேட்பாளராகக் கொண்டு வந்ததில் முக்கிய பங்கு வகித்தவர். இப்படியான ஒரு விடயத்தை ரணிலால் சாதித்திருக்கவே முடியாது. இந்த சூழ்ச்சித் திட்டத்தின் மூலமே அவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றார்கள்.

ஆனால் ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்த மகிந்தவுக்கும். மைத்திரிக்கும் இடையிலான வாக்கு வித்தியாசம் வெறுமனே நான்கரை இலட்சம்தான். (இப்போதைய நாடாளுமன்றத் தேர்தலில் அந்த வித்தியாசம் 3 இலட்சம் வாக்குகளாகக் குறைவடைந்து இருக்கிறது) மைத்திரி மேலதிகமாகப் பெற்ற வாக்குகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பாலும், ஜே.வி.பியினாலும், முஸ்லீம் காங்கிரசாலும் கிடைக்கப் பெற்றவை. எனவே நாடாளுமன்றத் தேர்தல் நடந்தால், அந்த வாக்குகள் பிரிந்துவிடும் சூழலில் ஐ.தே.க வெற்றி பெற முடியாது என்ற நிலை தெளிவாக இருந்தது.

அத்துடன், ஜனாதிபதி மைத்திரி சட்டவிரோதமான முறையில் அமைத்த ரணில் தலைமையிலான அரசுக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணையும் நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து வெற்றிகரமாக நிறைவேற்றப்படும் ஒரு சூழல் உருவாகி இருந்தது. இந்தச் சூழ்நிலையில்தான் எதிரணியினர் தேர்தலுக்குத் தயாராக முடியாத முறையில் நாடாளுமன்றம் அவசரம் அவசரமாகக் கலைக்கப்பட்டு தேர்தலுக்கு நாள் குறிக்கப்பட்டது. இந்த உண்மையை தேர்தல் அறிவித்த பின்னர் மைத்திரிபால நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் பகிரங்கமாக ஒப்புக் கொண்டிருக்கிறார்.


ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, மகிந்த தலைமையில் நாடாளுமன்றத் தேர்தலில் அமோக வெற்றி பெறும் என்று கண்ட மைத்திரியும் சந்திரிகவும், மகிந்தவுக்கு வேட்பு மனு அளிக்க முடியாது எனப் பிடிவாதம் செய்தனர். ஆனால் சிறீ.ல.சு.கவிலும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலும் மகிந்தவுக்கு பெரும்பான்மை ஆதரவு இருந்ததால், அவர்களால் ஒன்றும் செய்ய முடியாமல் போய்விட்டது. எனவே அவர்கள் இருவரும் தேர்தலில் தமது சொந்தக் கட்சியைத் தோற்கடிப்பதற்காக வேறு வகையான, கீழ்த்தரமான நடவடிக்கைகளில் இறங்கினர்.

மைத்திரி கட்சியின் தலைவராக இருந்துகொண்டு, தேர்தலில் தான் நடுநிலைமை வகிக்கப் போவதாகச் சொன்னார். இதே அடிப்படைத் தவறு. பின்னர் தான் சொன்ன மாதிரியும் கூட நடந்து கொள்ளவில்லை. மகிந்த ஒருபோதும் வெற்றி பெற மாட்டார் என ஒரு அறிக்கை வெளியிட்டு பொதுமக்கள் மத்தியில் குழப்பம் ஏற்படுத்தினார். அப்படி இருந்தும் மகிந்த தலைமையிலான அணி வெற்றி பெறுவது உறுதி என்று கண்ட பின்னர், 'மகிந்த அணி வென்றாலும், மகிந்தவைப் பிரதமராக்க மாட்டேன்' என இன்னொரு அறிக்கை வெளியிட்டு மேலும் குழப்பத்தை ஏற்படுத்த முயன்றார்.

மறுபக்கத்தில், தனது தந்தையும் தாயுமான பண்டாரநாயக்கவுக்கும் அவரது மனைவி சிறீமாவோவுக்கும் அபகீர்த்தியும், துரோகமும் ஏற்படுத்தும் வகையில், சிறீ.ல.சு.கவின் கை சின்னத்துக்கோ, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றிலைச் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டாம் எனவும், வேறு எந்த மிருகத்துக்கென்றாலும் (அதாவது ஐ.தே.க சின்னமான யானைக்கு) வாக்களிக்குமாறும் சந்திரிக பகிரங்கமாக நாட்டு மக்களுக்கு அறைகூவல் விட்டார். சந்திரிகவின் இப்படியான கேடுகெட்ட துரோகம் இதற்கு முன்னர் இலங்கையில் எந்த ஒரு தலைவராலும் நிகழ்த்தப்படவில்லை.

மைத்திரியும் சந்திரிகவும் இந்த நடவடிக்கைகளுடன் மட்டும் திருப்தி அடைந்துவிடவில்லை. மைத்திரி கட்சித் தலைவர் என்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி கட்சியினதும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினதும் செயலாளர்களை அடாவடித்தனமாகப் பதவி நீக்கம் செய்தார். கட்சியின் செயற்குழு, மத்திய குழுவிலிருந்தும் கூட பலரை நீக்கினார். அதுவும் தேர்தல் முடிந்து, நீதிமன்றங்கள் மாதக் கடைசி வரை இயங்க முடியாத, சூழ்நிலையில், தனது தீர்மானத்தை எவரும் நீதிமன்றப் படி ஏறி

# சாந்தசீலன் கதிர்காமர் மறைவு!



(1934 — 2015)

இலங்கையின் இடதுசாரிப் புத்திஜீவிகளில் ஒருவரான, நண்பர்களால் "சீலன்" என அழைக்கப்படும் சாந்தசீலன் கதிர்காமர், 2015 ஜீலை 25ஆம் திகதி தமது 81ஆவது வயதில் காலமானார். தமது பாடசாலைக் கல்வியினை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் பயின்ற சீலன், பின்னர் பேராதனை பல்கலைக்கழகத்தில் இணைந்து கல்வி கற்று வரலாற்றுத்துறைப் பட்டதாரியானார். அங்கு அவர் பயின்ற காலத்தில் இலங்கையின் மூத்த இடதுசாரிக் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சியுடன் தொடர்பு ஏற்பட்டது. அதன் காரணமாக அவர் அன்றிலிருந்து தமது இறுதிக் காலம் வரை, ஏதோ ஒருவகையில் இடதுசாரிச் சிந்தனை உள்ளவராகவே வாழ்ந்தார்.

கல்வித்துறைச் சேவையைப் பொறுத்த வரை, ஆரம்பத்தில் அவர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டதாரிப் பிரிவின் விரிவுரையாளராகப் பணி புரிந்தார். பின்னர் கொழும்பு பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளராகப் பணி புரிந்தார். பின்னர் யப்பான் ரோக்கியோ சர்வதேச கிறிஸ்தவ பல்கலைக்கழகத்தில் முதுமானிப் பட்டம் பெற்ற அவர், இலங்கை திரும்பி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறை விரிவுரையாளராகப் பணியாற்றினார். பின்னர் 1983 – 2000 ஆண்டுக் காலகட்டத்தில் யப்பானின் பல்வேறு பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளராகப் பணி புரிந்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பணி புரிந்த காலத்தில், 1979இல் அன்றைய ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் வட பகுதியில் கட்டவிழ்த்துவிட்ட, இனப் படுகொலை மற்றும் பல விதமான மனித உரிமை மீறல்களுக்கு எதிராகப் போராடுவதற்கென ஆரம்பிக்கப்பட்ட, 'இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம்' (MIRJE) உருவான போது, அதன் முதல் தலைவராகக் கடமை புரிந்தார்.

தமிழ் மக்கள் மத்தியில் முதன் முதலாக முற்போக்கு சிந்தனையுடன் அமைந்த, பெரியார் ஹான்டி பேரின்பநாயகம் தலைமையிலான யாழ்ப்பாண வாலிபர் மாணவர் காங்கிரசின் வரலாறு உட்பட பல வரலாற்று மற்றும் அரசியல் நூல்களையும்சீலன் கதிர்காமர் அவர்கள் எழுதி வெளியிட்டுள்ளார்.

அவரது மறைவையொட்டி, 'வானவில்' அன்னாருக்குத் தனது அஞ்சலியைச் செலுத்துவதுடன், அவரது பிரிவால் வாடும் குடும்பத்தினர்களுக்கு தனது அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறது. *

---

ஆட்சேபிக்காத வகையில் இந்த நடவடிக்கைகளை சூழ்ச்சிகரமாக மேற்கொண்டார்.

அதுமாத்திரமல்ல, தேர்தலுக்கு முன்னர் செயலாளரினால் தேர்தல் ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டிருந்த தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயரையும் மாற்றி அமைத்து, தேர்தலில் தோல்வியடைந்த தனக்குத் தேவையானவர்களைக் கூட புதிதாக நியமனம் செய்துள்ளார். தூக்கி வீசப்பட்டவர்களில் சிறீமாவோ காலத்திலிருந்து சுதந்திரக் கட்சி அரசில் கூட்டிணைந்திருந்த இடதுசாரி கட்சிகளின் வேட்பாளர்களும் அடக்கம். அதன் மூலம் 52 வருடங்களாக இடதுசாரிகளுடன் சிறீ.ல.சு.கவுடன் இடதுசாரி கட்சிகளுக்கு இருந்த தொடர்பை சந்திரிக – மைத்திரி குழு உடைத்தெறிந்துள்ளது.

நாட்டில் நல்லாட்சியைக் கொண்டு வரப்போவதாகச் சொன்ன மைத்திரியும் சந்திரிகவும், தமது சொந்தக் கட்சிக்குள்ளேயே சர்வாதிகாரத்தை நிலைநாட்ட ஆரம்பித்துவிட்டனர். எனவே நாடு எவ்வழி செல்லப் போகின்றது என்பதைச் சுலபமாகப் புரிந்து கொள்ளலாம். ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் 1977இல் நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டப் போகிறேன் என்று சொல்லிக் கொண்டுதான் ஆட்சிக்கு வந்தார். ஆனால் முதலில் அவர் செய்தது, தனது ஐ.தே.கவில் சர்வாதிகாரத்தைத்தான் நிலைநாட்டியதுதான். அதன் பின்னர் நாடு எந்தப் பாதையில் பயணித்தது என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

பண்டாரநாயக்கவின் காலத்திலும், மனைவி சிறீமாவோ காலத்திலும், மகிந்தவின் காலத்திலும் சிறீ.ல.சு.கவை அழிப்பதற்கு ஐ.தே.கவும், அதன் சர்வதேச எஜமானர்களும் பல பகிரதப் பிரயத்தனங்களில் ஈடுபட்டனர். ஆனால் அவர்களால் முடியவில்லை. இருந்தும் அவர்கள் தமது நோக்கத்தை இறுதியில் பண்டாரநாயக்க தம்பதிகளின் மகள் சந்திரிக மூலம் நிறைவேற்றி விட்டார்கள். ஆம், சிறீலங்கா சுதந்திரக் கட்சி(தலைமை)யை ஒரு வலதுசாரிக் கட்சி(தலைமை)யாக மாற்றி விட்டார்கள்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் உண்மையான நோக்கங்களையும், பாரம்பரியத்தையும் பாதுகாப்பதற்கு இன்றைய தேவை ஒரு புதிய தலைமையாகும். *

"போர் அல்லது மற்ற எதையும் போலவே புரட்சிகர எழுச்சியும் ஒரு கலையே ஆகும். அதோடு அது ஒரு சில நடவடிக்கை விதிகளுக்கு உட்பட்டதுமாகும். இவை புறக்கணிக்கப்படும் பட்சத்தில், இவற்றைப் புறக்கணிக்கும் கட்சிக்கு நாசம் உண்டாகும். முதலாவது விதி, உங்கள் விளையாட்டின் பின் விளைவுகளைச் சந்திக்க முற்றிலும் தயாராக இல்லாத போது புரட்சிகர எழுச்சியுடன் விளையாடாதீர்கள். இரண்டாவது விதி, புரட்சிகர எழுச்சி வாழ்க்கையில் பிரவேசித்து விட்டீர்களானால், மகத்தான உறுதியுடன் செயல்பட வேண்டும்"

–ஏங்கெல்ஸ்

# புற்றுநோயை உணவால் தடுக்கும் சில வழிமுறைகள்

*புற்றைப் (புற்றுநோய்) பொறுத்தமட்டில் நம் முதல் காவலன் பழங்கள்தாம். சொல்லப்போனால் அனைத்துக் கனிகளுமே ஏதோ ஒருவிதத்தில் புற்றுநோயின் வருகையைத் தடை செய்கின்றன. காடுகளின் ஓரத்தில் கிடைக்கும் இலந்தை முதல், மேற்கத்தைய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ரோஸ்பெரிகள் வரை ஒவ்வொன்றும் புற்றோடு மோதும் வல்லமை உடையவை. கனிகளின் நிறங்கள் பூச்சிகள், பறவைகளை ஈர்க்க இறைவன் படைத்ததாகக் கூறப்பட்டாலும், அவற்றை ருசிக்கும் மனிதர்களுக்கு சுவையோடு சேர்த்து புற்றுக்கு எதிரான தடுப்பாற்றலை வழங்கவும் செய்கிறது.*

*சிவந்த நிறத் தக்காளியின் மெல்லிய தோலில் நிறைந்துள்ள சிவப்பு நிறச் சத்தான லைக்கோபீன்கள் ஆண்களின் புறொஸ்ரேற் கோளப் புற்றுநோயைத் தடுக்கக்கூடியவை. வெள்ளைப் பூசணி, வெள்ளரி விதையும் இதே திறன் கொண்டவை. புறொஸ்ரேற் கோள வீக்கம் உள்ளவர்கள் தினமும் சின்ன வெங்காயம், தக்காளி, வெள்ளரிக்காய் போன்ற சலாட்டுகளை சாப்பிடுவது அந்தக் கோளப் புற்றைத் தடுக்க உதவும்.*

*கமலா ஆரஞ்சுப் பழத்தில் உள்ள மெல்லிய உட்தோலில் சிட்ரஸ் பெக்டின் என்ற பொருள் உள்ளது. இது பல புற்றுநோய்களைத் தடுக்கும் இயல்பு உள்ளது.*

*உள்ளூர் கனிகளில் சிவப்புக் கொய்யா, நாவல் பழம், திண்டுக்கல் பன்னீர் திராட்சை போன்றவை புற்றுநோய்த் தடுப்புத் திறன் வாய்ந்தவை. குறிப்பாக பன்னீர்திராட்சையின் விதையில் உள்ள துவர்ப்புச் சுவையுடைய ரிசர்விடால் சத்து புற்றுநோய்க்கு எதிராகப் போராடும். நாவல் பழத்தின் கருநீல நிறம் நாவில் படிவதைப் பார்த்திருப்போம். அந்த நிறமிச் சத்தும் புற்றை எதிர்க்கும் வல்லமை கொண்டது.*

*40 வயதைக் கடந்த பெண்கள், மாதவிடாய் முடிவை நெருங்கும் வயதினர், தினமும் உணவில் ஒரு கனியை எடுத்துக் கொள்வது மார்பகப் புற்றுநோய் வருவதைத் தடுக்கும். குறிப்பாக பப்பாளிப்பழத் துண்டுகள், மாதுளை முத்துக்கள், தர்பூசணி, இவற்றை தினசரி உண்ணும்போது புற்றின் வருகை குறையும். வேக வைத்த பீற்றுட், தர்பூசணி, மாதுளை இவற்றைச் சாறாக அடித்து, அதில் ஓரிரு புதினா இலைகளைப் போட்டு, அரை ஸ்பூன் மலைத் தேன் விட்டு வாரம் இரண்டு முறை அருந்துவது பெண்களுக்கு கருப்பை, மார்பகப் புற்றுநோய் வருவதைத் தடுக்கும்.*

*இரைப் புற்றுநோய்க்கு அதிக காரமுள்ள உணவுகளைத் தொடர்ச்சியாக எடுத்து வருவதும், மது அருந்துவதும், அடிக்கடி வலி மாத்திரைகள் எடுப்பதும், நாள்பட்ட குடல் புண்கள் மற்றும் இரைப்பைப் புண்கள் இருப்பதற்கு முக்கிய காரணங்கள். இரைப்பை குடல் சார்ந்த புற்றுகள் வராது இருக்க, மஞ்சள் ஒரு மிகச் சிறந்த தடுப்பு மருந்து.*

*வெள்ளைச் சர்க்கரை எனும் சீனி பலர் நினைப்பது போல நீரிழிவுக்கு மட்டும் சாதகமானது அல்ல. புற்றுநோய் பல்கிப் பெருக வெள்ளைச் சர்க்கரைதான் காரணமாக இருக்கிறது. அதேபோல் சர்க்கரைக்கு மாற்றாக ஜீரோ (Zero) கலோரி எனக் கூறிக்கொண்டு சந்தைக்கு இன்று வரும் பல்வேறு செயற்கை இனிப்புகள், அதி கொதி நிலையில் பிளாஸ்டிக்குளை எரித்தால் வரும் டயாக்சினைப் போல, புற்றுநோயைத் தருவிக்கும் காரணியாக மாறுகின்றன.*

காய்கறிகளில் பிரக்கோலி (Broccoli) , புற்றுநோயைக் குறைப்பதில் பயன் தருவது நிரூபிக்கப்பட்டுள்ளது. லோ (Low) கிளைசிமிக் தன்மையுடைய சிறு தானிய உணவுகள் புற்றுநோய் சிகிச்சையில் பொருத்தமான உணவுகள். குறிப்பாக மோர், சின்ன வெங்காயம், கம்மங்கூழ், மணமூட்டிகள், நறுமணமூட்டிகளுடன் சேர்த்துச் செய்த வரகரிசி பிரியாணி, உப்புமாவாக பொங்கலாகச் செய்யப்படும் தினையரி உணவுகள் என இவை எல்லாமே அடிப்படையில் இரத்தத்தில் சர்க்கரையை மெதுவாக உமிழ்பவை.

*கிட்டத்தட்ட 70 சதவிகிதப் புற்றுநோய்களை உணவின் மீதான அக்கறையை வைத்தே நாம் ஆரம்ப காலத்திலேயே தடுக்க முடியும்.*

**-மருத்துவர் கு.சிவராமன் (நன்றி: ஆனந்த விகடன்)**

'தேர்தலில் நல்ல தோல்வியடைந்து விட்டோம் என்பதை ஒப்புக் கொள்ளத்தக்க தைரியம் நம் எல்லோருக்கும் இருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். தேர்தல், சூதாட்டத்திற்கு ஒப்பானது. சூதில் ஏற்படும் வெற்றியும் தோல்வியும் மனிதனுடைய பெருமையையோ, புத்திசாலித்தனத்தையோ, சக்தியையோ பொறுத்ததல்ல. வெற்றியா? தோல்வியா? என்கின்ற வெறும் உச்சரிப்பை மாத்திரம் பொறுத்ததேயாகும். ஆதலால், இந்தத் தோல்விக்காக ஏன் விசனப்பட வேண்டும்? ஓட்டத்தில் களைத்துப் போனவன் பந்தயத்தில் தோற்றவனாவானே ஒழிய, வாழ்க்கைக்கு உதவாதவனாகிவிட மாட்டான்.'

**- தேர்தல் தோல்வி பற்றி பெரியார் 1934 - ஆம் ஆண்டில் கூறியது.**

(1934-ஆம் ஆண்டு நவம்பரில் இந்திய சட்டசபைக்குத் தேர்தல் நடைபெற்றது. இதில் பெரியாரின் நீதிக்கட்சி படுதோல்வியடைந்தது.)

# அப்துல் கலாம் (1931-2015) அவ்வப்போது கூறியவைகள்

○ கடின உழைப்பு, நேர்மைக்கு மாற்று எதுவும் இல்லை, நிச்சயமாக எதுவும் இல்லை.

○ கரைகளைக் கடக்கும் துணிவிருந்தால்தான் புதிய கடல்களை கண்டுபிடிக்க முடியும்.

○ அதிகம் பயணிக்காத பாதைகளில் செல்லும் துணிவை வளர்த்தெடுங்கள். அதுதான் உண்மையான தலைமைப் பண்பு.

○ அறிவுதான் உங்களை சிறந்தவர்களாகவும், பலமுள்ளவர்களாகவும் மாற்றுகிறது.

○ கருணையில்லாத அறிவியல் முழுமை பெறாது.

○ ஒரு தேசத்தின் மகுடமே அதன் சிந்தனையாளர்கள்தான்.

○ தோல்விகளை எதிர்கொள்ள கற்றுக் கொள்ளுங்கள். அதுதான் வெற்றிக்கான மிக முக்கியமான திறமை.

○ மிக உயர்ந்த இலட்சியம், மனிதர்களுக்கான எல்லை என்ற சுவர்களைத் தகர்க்கிறது.

○ நீங்கள் உறங்கும்போது வருவதல்ல கனவு. உங்களை உறங்கவிடாமல் செய்வதே கனவு.

○ வானத்தைப் பாருங்கள். நாம் தனித்து இல்லை. இந்தப் பிரபஞ்சம் முழுவதும் நம்மிடம் நட்பாக உள்ளது. கனவு காண்பவர்களுக்கும், உழைப்பவர்களுக்கும் மட்டுமே அது சிறந்தவற்றை வழங்குகிறது.

○ கனவு காணுங்கள், கனவு காணுங்கள், கனவு காணுங்கள். கனவுதான் சிந்தனையாகவும், சிந்தனைதான் செயலாகவும் மாறுகிறது.

○ அறிவியலுக்கு பயம் தெரியாது. வித்தியாசமாக சிந்திக்க உங்களுக்கு துணிவிருந்தால், அறியப்படாத விஷயங்களுக்கு சவால் விடும் ஆற்றலும் உங்களுக்கு இருக்கிறது.

○ முடியாத விஷயங்கள் குறித்து கனவு காண்பவர்களே அவற்றை வெற்றி கொள்ள முடியும். *

முன்பக்கத்தொடர்ச்சி...

இதற்கு மேலதிகமாக, மேற்கத்தைய ஊடகங்களும், இந்திய ஊடகங்களும், தனிப்பட்ட முறையில் மகிந்த ராஜபக்சவுக்கு எதிராகவும், ஐ.தே.கவுக்கு ஆதரவாகவும் பெரும் எடுப்பிலும் தொடர்ச்சியாகவும் பிரச்சாரம் மேற்கொண்டு வந்துள்ளன.

இவையெல்லாவற்றையும் பயன்படுத்தி, ஐ.தே.க. எப்படியோ ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. அதன் மூலம் இலங்கையின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாக மாறியுள்ளது. இனி என்ன நடக்கும் என்பதை இப்பொழுதே சொல்லி விடலாம்.

உள்நாட்டில் தமது அரசியல் எதிரிகளை ஒழித்துக் கட்டுவதற்காக வகை தொகை இல்லாமல் கைது நடவடிக்கைகளும், வழக்குத் தொடருதலும் (ஏற்கெனவே அது தொடங்கிவிட்டது) நடைபெறும். தேசிய பொருளாதாரமும், கலாச்சாரமும் சிதைக்கப்பட்டு, நவ காலனித்துவப் பிடியில் நாடு அமிழ்த்தப்படும்.

கல்வி, சுகாதாரம், போக்குவரத்து உட்பட அத்தியாவசிய மக்கள் சேவைகள் அனைத்தும் முற்றுமுழுதாக தனியார் மயப்படுத்தப்படும்.

பொலிஸ் காட்டாட்சி அமுலுக்கு வரும்.

சிறுபான்மை இனத் தலைமைத்துவங்களுடன் (சம்பந்தன், ஹக்கீம் போன்றவர்களுடன்) வர்க்க ரீதியிலான கூடிக்குலாவலைச் செய்யும் அதேநேரத்தில், சாதாரண அந்த இன மக்கள் மீது தேசிய ஒடுக்குமுறை தீவிரமாக்கப்படும்.

நாட்டின் வெளிநாட்டுக் கொள்கை உலக – பிராந்திய மேலாதிக்க சக்திகளுக்கு ஆதரவானதாக மாற்றி அமைக்கப்படும்.

அரசியல் சூழலைப் பொறுத்தவரை, 2009இல் புலிகளை அழிப்பதற்கு முன்னிருந்த நிலைக்கு நாடு இட்டுச் செல்லப்படும்.

இவை தவிர, இன்னும் என்னென்ன வழிகளில் மக்கள் விரோத, தேச விரோத நடவடிக்கைகளை எடுக்கு முடியுமோ, அத்தனை நடவடிக்கைகளையும், ரணில் - மைத்திரி அரசு மேற்கொள்ளும். எனவே நாட்டையும், மக்களையும் பாதுகாப்பதற்காகப் பல நடவடிக்கைகளை இப்பொழுதிருந்தே எடுக்க வேண்டிய தேவை, ஜனநாயக – முற்போக்கு – தேசபக்த சக்திகளுக்கு முன்னால் உள்ளது.

ஏகாதிபத்தியத்துக்கும், உள்நாட்டு பிற்போக்கு சக்திகளுக்கும் எதிராக இப்பொழுது உள்ள பிரதான அணியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை மேலும் விரிவாகவும், இறுக்கமாகவும், பலப்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது. குறிப்பாக, தொழிலாளர்கள், விவசாயிகள், அரச ஊழியர்கள், மீனவர்கள், கலாச்சாரப் பிரிவினர், மாணவர்கள், வாலிபர்கள், மாதர்கள், வர்த்தகர்கள் போன்ற பெரும் மக்கள் திரளினர் மத்தியில், அரசியல் கட்டமைப்புகளையும், அரசியல் பிரச்சாரத்தையும் வலிமையுடன் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

இந்த நாடு ஏகாதிபத்தியவாதிகளின் வேட்டைக்காடாக மாறுவதற்கு உள்ளூர் பிற்போக்குவாதிகள் தரகு வேலை பார்ப்பதை மக்கள் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. கடந்த காலங்களில் நாட்டை வழிநடாத்திய அரச தலைவர்களான எஸ்.டபிள்யு.பண்டாரநாயக்க, அவரது துணைவியார் சிறிமாவோ பண்டாரநாயக்க, மகிந்த ராஜபக்ச போன்றோரும், இடதுசாரித் தலைவர்களும். சரியான வழியில் நாட்டை வழிநடாத்தி, உலகின் முன்னால் ஒரு புகழ்மிக்க நாடாக எமது நாட்டைக் கொண்டு வந்தனர். அந்தகைய ஒரு பணிக்கு மீண்டும் தோள் கொடுப்பதற்கு தேசத்தை நேசிக்கும் தலைவர்களும், மக்களும் முன்வர வேண்டும். *

கடந்த காலத்துக் கசப்புணர்வுகளை நாம் மூட்டைகட்டி வைக்கலாம். ஆனால் கடந்த கால அனுபவங்களிலிருந்து கற்ற பாடங்களை மறக்கக் கூடாது

-ஜெனரல் ஜியாப்

'Vaanavil' is a registered member of the National Ethnic Press and Media Council of Canada
வானவில்

# தமிழ் தேசியக் கூட்டமைப்பின் புதிய ஏமாற்று வேலை!

இம்முறை நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமது தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வடக்கு கிழக்கில் 20 உறுப்பினர்களைத் தமிழ் மக்கள் தெரிவு செய்து தர வேண்டும் என அதன் தலைவர் இரா.சம்பந்தன் அடிக்கடி கோரி வந்தார். அவரது 'பேராசை'யை தமிழ் மக்கள் நிறைவேற்றாவிடினும், போனஸ் ஆசனம் உட்பட 16 உறுப்பினர்களை அவர்களுக்குத் தமிழ் மக்கள் 'அள்ளி' வழங்கியுள்ளனர்.

ஒவ்வொரு தேர்தலிலும் மக்களின் வாக்குகளைக் கொள்ளை அடிப்பதற்காக, ஏதாவதொரு 'புலுடா'க் கதைகளை தமிழ் தலைமைகள் மக்கள் முன் வைப்பது வழமை.

முன்னைய தேர்தல்களின் போது, 'சர்வதேசம் தமிழ் மக்களை உற்றுப் பார்க்கிறது. எனவே உங்கள் பலத்தை எமக்கு வாக்களிப்பதன் மூலம் உலகத்திற்கு எடுத்துக் காட்டுங்கள்' என்ற வாய்ப்பாடே அவர்களது தேர்தல் தாரக மந்திரமாக இருந்தது. ஆனால் இம்முறை அந்த வாய்ப்பாடு மக்களிடம் எடுபடாது என்பது கூட்டமைப்புத் தலைமைக்கு நன்கு தெரிந்திருந்தது. அத்துடன், 'ஒரு நாடு, இரண்டு நிர்வாகங்கள்' என்ற கோசத்தை முன்வைத்த, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு மக்கள் மத்தியில் ஆதரவும் பெருகி இருந்தது.

இந்த நிலைமையில் கூட்டமைப்புத் தலைமை ஒரு தந்திரத்தைக் கையாண்டது. அதாவது, 'ஜனவரி 08இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மாற்று அணி வேட்பாளரை ஆதரித்து ஒரு ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளோம். அதன் மூலம் தமிழர் பிரச்சினைக்கு 2016இல் நிச்சயம் தீர்வு ஏற்படும். இந்த நிலைமையில் தமிழர்களின் வாக்குகள் சிதறடிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். எனவே தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து அதன் கரத்தைப் பலப்படுத்துங்கள்' என்ற கோரிக்கையை விடுத்து, வாக்குக் கொள்ளையை நடாத்தி முடித்துள்ளனர். தமது அந்தக் கோரிக்கைக்குச் சாதகமாக யாழ் மறை மாவட்ட ஆயர், நல்லை ஆதீனம் போன்றவர்களையும் கருத்துச் கூற வைத்தனர்.



அதன் காரணமாக, ஆரம்பத்தில் கஜேந்திரகுமாரின் கட்சியை ஆதரித்து நின்ற, யாழ் பல்கலைக்கழக சமூகம், புலம்பெயர் தமிழர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்புகளான கனடிய தமிழ் காங்கிரஸ், பிரித்தானிய தமிழர் பேரவை என்பவையும் பிற அமைப்புகளும் தமது நிலையை மாற்றி, தமிழ் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்துத் தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என அறிக்கை விடுத்தன. அதனால், 'படித்தவனும், வெளிநாட்டில் உள்ளவனும் சொன்னால் அதில் ஏதும் உண்மை இருக்கும்' எனக் கருதிப் பழகிப் போ தமிழ் மக்கள், தமது வாக்குகளைக் கூட்டமைப்புக்கு அள்ளிப் போட்டு அவர்களை வெற்றி பெற வைத்துவிட்டனர்.

எவராவது, தேர்தலுக்கு முன்னர், 'தமிழ் தேசியக் கூட்டமைப்பு கோரும் சமஸ்டி வழங்கப்பட மாட்டாது, கூட்டமைப்புடன் அது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தையும் கிடையாது' என அழுத்தம் திருத்தமாகப் பிரகடனம் செய்த ரணில் விக்கிரமசிங்கவின் கூற்றுப் பற்றியோ, அல்லது 'இலங்கையில் ஒற்றையாட்சி முறைதான் தொடரப்படும்' எனப் பகிரங்கமாக அறிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அறிவிப்புப் பற்றியோ கவனத்தில் எடுத்ததாகவோ அல்லது அக்கறை செலுத்தியதாகவே தெரியவில்லை.

5 வருடங்கள் கழித்து இருக்கின்ற அற்ப சொற்ப உரிமைகளையும் தமது வங்குரோத்து அரசியலால் இழந்த பின்னர், தமிழ் தலைமை தமிழ் மக்களின் முன்னால் வந்து நின்று புதிதாக ஏதாவது ஒரு மோசடித் திட்டத்தை முன் வைக்கும் போது, அதையும் ஏற்றுத் தமிழ் மக்கள் வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கை தமிழ் தலைமைக்கு இருக்கும் வரை, அவர்கள் எதற்கும் தயங்கப் போவதில்லை.

**– சயம்பன்**

"மனித குலத்திற்காக பணியாற்று. இந்த வாழ்வு ரோஜா மலர்ப்பாதை அல்ல. முட்கள் நிறைந்த பாதை! நாம் மனித குலத்தின் நன்மைக்காக பணியாற்றுவது என முடிவு செய்து விட்டால் எந்தஒரு துன்பமும் நம்மை நிலை குலைய வைக்காது. ஏனெனில் இந்த தியாகங் கள் மனித குலத்தின் நன்மைக்காக!"

**- கார்ல் மார்க்ஸ்**